தளம்
THALAM

தளத்தின்

# விருட்சம்

சீளை – 2024

துளை –10



தளத்தின்

# விருட்சம்

கிளை - ௨௦௨௪
தளை - ௧௦

## உள்ளே!!..


- முன்னுரை
- ஆசிரியர் உரை

1. திறன்விருத்தி கட்டுரை - உள்ளுதல் எல்லாம் உயர்வு உள்ளல்.
2. கவிதை - பிரியாவிடை
3. "நவீன தமிழ்த்தேசியம்" விரைவில் மலர்ந்தாக வேண்டும்.
4. தொடர்கதை - கண்ணியவான்
5. அனுபவ பகிர்வு
   5. 1. பல்கலைக்கழக அனுமதி அனுபவம்
   5. 2. தளத்தின் Excel வகுப்பின் அனுபவம்
6. அகத்தியர் தாபனம் - திருக்கரசையம்பதி
7. இலங்கை பாராளுமன்ற தேர்தல்
8. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
9. குறுக்கெழுத்து புதிர்
10. குழந்தைகளில் வளர்ச்சி மற்றும் மனநல பிரச்சினைகள்
11. Permudo Triangle!

- ஐப்பசிமாத திருமலை செய்திகள் - ஓர் பார்வை.
- தளத்தின் தடம்
- தளத்தின் கார்த்திகை மாத திட்டங்கள்

## முன்னுரை

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தளத்தின் "விருட்சம் கிளை 2024, தளை - 10" இனை இம் முறையும் வெளியிடுவதில் பெரும் உவகை அடைகின்கிறேன்.

முற்றும் முழுதாகவே இளையோரின் கைவண்ணத்தில் பல்துறை சார் சுவாரஸ்யமான அறிவுப்பொதிகள் பலவற்றை தேக்கியபடி, ஒவ்வொரு ஆக்கங்களும் மாறுபட்ட கோணத்தில் பிரசுரிக்கப்படும் விடயங்களையும், இளையோர் எம் எண்ணவோட்டங்களையும் இணைத்து இதழ் வெளியிடப்பட்டுள்ளது.

பெரியார் வரலாறு முதல், கவிதை, கட்டுரை, தேடலை அதிகரிக்கும் குறுக்கெழுத்து புதிர், உடல் உளநலம் காக்கும் மருத்துவ குறிப்புகள் என பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கி எமது ஆக்க குழுவினரால் திருமலை மண்ணில் வெளிவரும் ஓர் இதழ் என்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

தடை கொண்ட இவ்வுலகில் பல படிகளைக் கடந்து பயணிக்கும் நம் விருட்சத்தின் மாத இதழோடு தொடர்ந்து பயணித்து பயன்பெறுவீராக!!

## ஆசிரியர் உரை

அன்பார்ந்த தோழமைகளே!!

கடந்த 06 வருடங்களாக சமூகத்தோடு பயணித்து வரும் தளம் அமைப்பின் ஒருங்கிணைப்பில் இவ்வருடம் (2024) தொடக்கம் இன்று வரை வெளிவந்து கொண்டிருக்கும் விருட்சம் மாத இதழின் ஆசிரியராக உங்களுடன் பயணிப்பதில் பெரும் உவகை அடைகிறேன்.

முற்று முழுதாக இளையோரின் கைவண்ணத்தில் இளையோர், மாணவர்களுக்காக வெளியாகி வரும் விருட்சம் மாத சஞ்சிகை கடந்த மாத இதழை விட முற்றிலும் மாறுபட்ட வகையில், உங்கள் மனம் கவரும் புதுப்பொலிவுடன் உங்கள் கைகளில் தவழவிருக்கிறது.

இவ் விருட்சம் கோணேசர் மண்ணில் மேலும் கிளை விட்டு துளிர்க்க இளையோர் உங்கள் ஆதரவினை படைப்புகளாக எதிர்பார்க்கின்றோம்.

இவ் இதழைப் பற்றிய கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்!

அனுப்பவேண்டிய தொலைபேசி இலக்கம்:
0776243212

# 1 திறன் விருத்தி கட்டுரை - "உள்ளுதல் எல்லாம் உயர்வு உள்ளல்"

எண்ணுகின்ற எண்ணங்கள் எல்லாம் உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்று எல்லாப் பெரியவர்களும் கூறுகிறார்கள். ஏன் வள்ளுவரும் "உள்ளுதல் எல்லாம் உயர்வு உள்ளல்" என்று எடுத்துக் காட்டுகிறார். அன்று தொட்டு இன்றுவரை உலகில் அனைத்துமே மனித எண்ணங்களில் இருந்து தான் தோன்றுவதாகச் சொல்கின்றனர். நாம் மேற்கொள்ளும் திறனும் முயற்சியும் நம்முடைய எண்ணங்களால் தான் தூண்டப்படுகின்றன. தன் திறனால் தூண்டப்பட்டு, நான் என்னவாக வரவேண்டும்? என் வழிகாட்டல் யார்? நான் செல்ல வேண்டிய பாதைதான் என்ன? எனும் தனித்திறமையை உறுதிப்படுத்திக் கொள்ள, அவனுக்கு அவனே வழிகாட்டியாக மாற முயற்சிக்கின்றான்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய எண்ணங்கள் தான் வழிகாட்டியாக அமைகின்றன. ஒருவன் தனக்குத் தானே வழிகாட்டியாக இருக்கும் போது, எது அவனுக்கு வழி காட்டுகின்றது? எவ்வாறு அதனை அவன் அடையாளம் காண்கிறான்? என்ற கேள்விகளுக்கு விளக்கமாக சில உதாரணங்கள் தெளிவுபடுத்தப்படுகிறது. ஒரு நாற்காலியை ஒரு தச்சன் உருவாக்குவதாக இருந்தாலும் முதலில் தன்னுடைய எண்ணத்தில் தான் அதை வடிவமைத்துக் கொள்கிறான். பிறகு தான் மரத்தில் அதை உருவாக்குகிறான். அதே போலவே, ஒரு ஓவியன் ஒரு காட்சியை திரைச்சீலையில் சித்திரமாகத் தீட்டுமுன், மனத்திரையில் முதலில் அதை எழுதிப் பார்த்துக் கொள்ளுகிறான். பிறகே அதற்கு நிஜமான ஓவிய வடிவம் கொடுக்கிறான். அவ்வாறே, ஒருவர் தன்னுடைய விருப்பப்படி வீடு கட்ட விரும்புகிறார் அதற்குமுன் வரவேற்பறை, சாமியறை, படுக்கையறை, சமயலறை, உணவு உண்ணுமறை, குளியலறை போன்றவை எவ்வாறு அமைய வேண்டும் என்றெல்லாம் முதலில் கற்பனை செய்து பார்க்கிறார், பிறகு தன்னுடைய எண்ணங்களை பொறியியலாளரிடம் சொல்லி அதற்கேற்ப வரைபடத்தை வரைய சொல்கிறார். இந்த வரைபடத்தை ஆதாரமாகக் கொண்டே கட்டிடம் எழுப்பப்படுகின்றது. ஆகவே. ஒரு மனிதன் எதைச் செய்ய விரும்பினாலும் அது பற்றிய எண்ணங்களை அவன் கற்பனை செய்கிறான். அதனால் அவனுடைய செயலுக்கு எண்ணமே ஆதாரமாகிறது. எண்ணமே முதன் நிலையும் பெறுகின்றது.

ஒரு பொருளை உருவாக்குவதற்கு மட்டுமல்ல, வாழ்க்கையில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு கூட எண்ணமே ஆதாரமாகிறது. நாம் வாழ்க்கையில் சாதனைபுரிய வேண்டும் என எண்ணுகின்றோம். பிறகு அந்த எண்ணத்தை எவ்வாறு செயல்படுத்துவது என்று திட்டமிடுகின்றோம். நாம் மேற்கொள்ளும் முயற்சி நம்முடைய எண்ணங்களால் தூண்டப்படுபவை. இதனால் தான் கற்பனைகள் ஆரோக்கியமானவை என்கிற கருத்தும் சொல்லப்படுகிறது. எண்ணங்களின் பலத்தினாலேயே முயற்சிகளும் பலம் பெறுவதால் உயர்ந்த எண்ணங்கள் நம்மை மேல்நிலைக்கு இட்டு செல்லும் ஆற்றல் படைத்தவையாக இருக்கின்றன. வெற்றி பெற்ற மனிதர்கள் அனைவரும் தங்களுக்கு வெளியில் ஒரு வழிகாட்டியை ஏற்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் வெற்றிபெறவில்லை. இந்திரா காந்தி, அப்துல் கலாம் மற்றும் மகாத்மா காந்தி, தங்கள் எண்ணங்கள். திறன்கள் மற்றும் செயல்களில் மாபெரும் பாதைகள் அமைத்தவர்கள். அவர்கள் வெற்றிக்கு வழிவகுத்த முக்கிய காரணங்களில் அர்ப்பணிப்பு, துணிச்சல், அறிவு மற்றும் சமூக தேவைகளைப் புரிந்துகொள்வது ஆகியவை விளங்கும் .

மகாத்மா காந்தி, அஹிம்சா (அலட்சியாமை) மற்றும் சத்யாகிரஹா (செயற்கையாக எதிர்ப்பை கண்டுபிடித்தல்) என்ற நெறிகளுக்கு வழிகாட்டியவர். அவரது இந்த எண்ணங்கள், இந்திய விடுதலைப் போராட்டத்திலும் உலகளாவிய மனித உரிமை போராட்டங்களிலும் மிக முக்கிய பங்கு வகித்தன. உலகம் முழுவதும் அமைதியின் வழியைக் காண, அவரது எண்ணங்கள் இன்றும் வழிகாட்டி ஆகின்றன. இந்திரா காந்தி, இந்தியாவின் முதல் பெண் பிரதமராக, திடமாகத் தன் கடமை மேல் நம்பிக்கை வைத்தார். அசிரா, நமது நாட்டின் அரசியல், பொருளாதாரம் மற்றும் பல்வேறு நடவடிக்கைகள் பற்றி தனக்கென ஒரு புதிய பார்வை உருவாக்கி, ஆற்றலுடன் சவால்களை எதிர்கொண்டு, இந்தியாவின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டினார் அவர் ஓர் இந்தியா" என்ற பார்வையை முன்னெடுத்தார், அதே நேரத்தில் உலகில் இந்தியாவின் மகிமையை உயர்த்தினார்.

அப்துல்கலாம் இந்தியாவின் முன்னணி விஞ்ஞானி மற்றும் ஆராய்ச்சியாளர். தனது அறிவு மற்றும் திறமையை மக்களின் நலனை முன்னெடுக்க செலவிட்டார். அவர் தனது வாழ்க்கையை கல்வி, அறிவியல், மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைத்துப் பாரதத்தின் செழுமையை மேம்படுத்தி, இளைஞர்களுக்கு பெரிய கனவுகளை நோக்கி உயருங்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தினார். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எடுத்த பாதைகள் மற்றும் கடமைகள், அவர்களை வெற்றிக்கு வழிகாட்டியது. உலகின் பல இடங்களில் இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை புதிய பாதையில் உருவாக்குவதற்கான ஊக்கத்தைக் கொண்டு, இவர்களின் அறிவையும் அசலான செயற்பாடுகளையும் இன்று பின்பற்றுகின்றனர். அவர்களின் திறன் என்பது குறிப்பிட்ட ஒரு துறையில், தன் ஆராய்ச்சி மற்றும் முயற்சிகளை எவ்வாறு உன்னதமாக உருவாக்குவதைப் பொறுத்து, மகாத்மா காந்தி, இந்திரா காந்தி மற்றும் அப்துல் கலாம் அவர்களின் திறன், சர்வதேச அளவில் மனித குலத்துக்கே ஒரு வழிகாட்டியாக அமைந்தது. இவ்வாறு இந்திராகாந்தி, மகாத்மாகாந்தி, அப்துல்கலாம், தங்களுடைய வாழ்க்கைக்கு தாங்களே வழிகாட்டி என்ற நிலையை பெற்றதினால் தான் உன்னதமான பதவிக்கு வந்து வரலாற்றில் நிலையான இடத்தை பெற முடிந்தது.

நாம் சுயமாக சிந்தித்து எண்ணங்களை உருவாக்கி கொள்ளாதவரை நாம் செயல்படுவதில்லை. நம்மிடம் இயற்கையாக தோன்றும் எண்ணங்களாயினும் சரி, அல்லது வெளியிலிருந்து நம்மை பாதிக்கும் எண்ணங்களால் தோற்றுவிக்கப்பட்ட எண்ணங்களாயினும் சரி. நமக்கு வழிகாட்டி அழைத்துச் செல்பவைகளில் மிக பிரதான மாக விளங்குவது எண்ணங்கள் எனும் திறனே. எண்ணங்களைத் தவிர சிறந்த வழிகாட்டிகள் நமக்கு வேறு எவரும் இல்லை. அந்த வழிகாட்டிகளை வலிமையாக்கி கொள்வதன் மூலம் நம்மை நாமே பலப்படுத்திக் கொள்ள முடியும். இதனை, "பிறர் ஏற்ற மொழி சொல்லல் பெற்ற நெஞ்கதன் செயல் முயற்சி பொருந்தி" என்ற குறளில், "தன் செயல் முயற்சி பொருந்தி" என்ற பகுதியில் நம்முடைய எண்ணங்களில் வலிமையை பற்றி பேசுகிறது. உண்மையில் எத்தனை சிறந்த எண்ணங்களே இல்லையென்றாலும் அவை செயல்படுத்தப்பட்டு முயற்சியில் இருந்து பலன் காணப்பட வேண்டும் அதன் மூலம் நமது எண்ணங்கள் திறனாக மாறுகின்றன என இக்குறள் மூலம் வள்ளுவர் அதனை தெளிவுபடுத்துகின்றார். அதேபோலவே, நம் எண்ணங்கள் என்பது தான் நமது திறன் வளர்ச்சிக்கான முதன்மையான அடிப்படையாகும். எல்லா செயல்களுக்கும் முன்னர், அவை தொடர்பான எண்ணங்களோடு தொடங்க வேண்டும். உணர்வு மற்றும் ஆற்றல் மிகுந்த எண்ணங்கள், புதிய கற்றல் மற்றும் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். மனதில் உள்ள

சாதகமான எண்ணங்கள், மனப்பூர்வமாக தன்னை மேம்படுத்த, புதிய திறன்களை பெற, முன்பதிவு செய்யப்பட்ட வழிகளை பின்பற்ற உதவுகின்றன. உதாரணமாக, தொழில்முனைவோர் அல்லது கலைஞர்களின் வாழ்க்கையில் பெரும்பாலும் புதிய எண்ணங்கள். புதிய திட்டங்கள். தனித்துவமான அணுகுமுறைகள் அவர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குகின்றன. திறன் வளர்ச்சி என்பது நிறைய முயற்சிகளின் விளைவு என்றாலும், அவை மனதில் ஆரம்பித்த எண்ணங்களிலிருந்து மட்டுமே உருவாக்க முடியும். நமது எண்ணங்களின் திறன், அவற்றின் செயல்பாட்டில் நமக்கு புதிய வாய்ப்புகளை வழங்குகின்றது. எப்போது நமது எண்ணங்கள் மாற்றத்தை ஏற்றுக்கொள்கின்றன, அப்போது மட்டுமே நாம் ஒரு புதிய பாதையை அடையாளப்படுத்தி, முன்னேற்றத்தை அடைய முடியும். ஆகவே தான், வள்ளுவரிலிருந்து இன்றைய மனோதத்துவ வாதிகள் வரை நம் எண்ணங்கள் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.எண்ணங்கள் உயர்ந்ததாக இருக்கும் போது நம்முடைய முயற்சிகளும் வானளாவி உயர்ந்து நிற்கும்.

மேரி ரஜனட் நோபட் சேவியர்
மனையாவெளி



“வேகமாக நடக்க வேண்டுமெனில் தனியாக செல்லுங்கள்.. நீங்கள் நீண்ட தூரம் நடக்க வேண்டுமெனில் , யாருடனாவது சேர்ந்து செல்லுங்கள்”.
- ரத்தன் டாடா -

நல்லாசான்

கற்றதை விற்றல் பொருட்டல்ல - கல்வி
கற்றதை கற்பித்து, அற்றதை தான்
கற்றுக்கொண்டு, ஏறத்துடிப்புரை புகழ்மிசை
ஏற்றி விடுவோரே போற்றத்தக்க நல்ல
ஆசான்.



## 2 பிரியாவிடை

அசைபோடும் எண்ணத்தில்
எத்தனை பூக்கள்
அழுதாலும் வராது அந்த நாட்கள்
கண்ணீரிலே தேனியாய்
மொய்க்கும் நினைவுகள்
தண்ணீர் இன்றியே ஓடும் எங்கள்
படகுகள்
பாடசாலை ஆகிய ஆலமரத்தில்
விழுது போன்று வரும் உறவுகள்
போகும் வரை விழுதாய் புதுப்புது
உறவுகள்
சாகும்வரை மறக்காத
நினைவுகள்
மாளிகை போன்ற அழகான
கூடுகள்
அழகான கூட்டினில்
முப்பத்தொரு இதயங்கள்
இதயங்களில் உருது கவிஞன்
உமர்கஜாமின் கவிதைகள்
கவிதைகளில் எங்கள் கண்ணீர்
துளிகள்
முடியாத என் வாழ்க்கை
பயணத்தில்
முடிந்தது என் பாடசாலை
பயணம்

வாமதேவன் சங்கீர்த்
இலிங்கநகர்



# 3 "நவீன தமிழ்த்தேசியம்" விரைவில் மலர்ந்தாக வேண்டும்.

சற்றும் எதிர்பார்த்திராத பல செய்திகளை செவிகளிலே அறைந்து சொல்லியிருக்கிறது இப்பாராளுமன்றத் தேர்தல் களம். பெருந்திருப்பமாக அமைந்த யாழ்,வன்னி தேர்தல் மாவட்ட முடிவுகளும் சரி, ஆங்காங்கே சில மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் சாய்ந்த வாக்குகளாயினும் சரி, வைத்தியர் அர்ச்சுனாவின் பாராளுமன்ற பயணமாயினும் சரி, இவற்றை இத்தனை காலமும் "தமிழ்த்தேசியம்" என்பதை சுயலாப அரசியலுக்காக பயன்படுத்திய அரசியல்வாதிகளுக்கானதும், அபிவிருத்தி அரசியல் என்ற போர்வையில் மக்களை ஏமாற்றிப் பிழைத்த அரசியல்வாதிகளுக்குமான கசையடி என்றே கூறலாம். பெரும்பான்மையாக இருக்கின்ற மத்திய வர்க்கத்தினர் மனங்களில் தொடர்ச்சியாக ஏற்பட்ட விரக்தியும் அதிருப்தியும் எமது பிரதேசங்களில் மூடிமறைக்கப்படுகின்ற அரச நிர்வாகச்சிக்கல்களும் வாக்குகளை மறுபுறம் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கின்றன.

"எமது தமிழ் கட்சிகள் எல்லாம் ஒன்றாய் நின்றால் நன்றாய் இருக்கும்" என்ற ஆசையான கோரிக்கையின் ஆயுத வடிவமே இது. தம்மிடம் தற்போது எஞ்சியிருக்கின்ற வாக்கு எனும் ஆயுதமுனையில் அனைத்து தமிழ்க் கட்சிகளுக்குமான கடைசி அறைகூவலாக இதைக் கருதலாம். மக்கள் உரிமையை விட்டுக்கொடுக்க தயாரில்லை ஆனால் ஒரு வேளை உணவுக்கான போராட்டத்தின் முன்னாலும், அன்றாட அத்தியாவசிய தேவைகளை (வைத்தியசாலை, அரச திணைக்களங்கள், பொதுச்சேவைகள்) நிறைவேற்றிக்கொள்வதில் எதிர்கொள்கின்ற இடர்பாடுகளுக்கு முன்னாலும் வெறுமனே போலியான வீராப்புப் பேச்சுக்களை தொடர்ந்து கேட்க மக்கள் தயாரில்லை என்பதை தெளிவாக கூறியிருக்கிறார்கள்.

இன்றைய தலைமுறைக்கான அரசியலை செய்வதிலே தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒட்டுமொத்தமாக தோற்றுப்போக அவற்றை மிகக் கச்சிதமாக கையாண்டிருக்கிறது தேசிய மக்கள் சக்தியின் அரசியல் பணியகம் (Political Bureau). தமிழ்த்தேசியம், சுயநிர்ணயம், சமஷ்டி, தீர்வு என்று வாய்க்கு வாய் கூறியவர்கள் அவற்றுக்கான தெளிவையும் விளக்கங்களையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டுபோய் சேர்ப்பதிலே தோற்றுப்போனார்கள்.
தமிழ்த்தேசியம் என்பது இனவாதமோ, பிரிவினைவாதமோ அல்ல. அந்தச் சொல் அதை சுயநலனுக்காக பயன்படுத்திய அரசியல்வாதிகளால் மிகத்தவறாக காண்பிக்கப்பட்டிருக்கிறது. அது பல நீண்ட நெடிய போராட்ட வரலாற்றினைக் கொண்ட இனமொன்றின் கூட்டுணர்வு - தனக்கென்ற நிலம், மொழி, கலை, கலாசாரம், உணவுப்பழக்கவழக்கம், பண்பாட்டுப் பாரம்பரியங்களின் கூட்டு, நம் சுயத்தின் வெளிப்பாடு, இன்னமும் தெளிவாகச் சொன்னால் நம் வாழ்வியலே "தமிழ்த்தேசியம்" என்பதை சொல்ல தெரிந்தும் மறந்தே போனார்கள்.

சமூக ஊடகங்களை மட்டும் வைத்துக்கொண்டு அரசியல் செய்யலாமா ? என்ற கேள்விக்கு "அதிலும்" அரசியல் செய்யலாம் என்ற பதில் வழங்கப்பட்டிருக்கிறது. பாதைகளை திறத்தல், பெருங்கூட்டங்களை நடாத்துதல், அக்கூட்டங்களுக்கு தரைவழியாக வருதல் போன்ற விடயங்களெல்லாம் முகப்புத்தகம் (Facebook) மற்றும் YouTube ஆகியன மூலம் பெருஞ்சாதனைகளாக காட்டப்பட போட்டியிடுபவர்கள் யாரென்று தெரியாமல் கூட "அனுர" செய்வார் என்ற

நம்பிக்கையில் அந்தச் சின்னத்தை தேடிப் புள்ளடியிட்டவர்களும் அதிகம். அத்தோடு ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் தெரிவு மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றத்தோடு ஒத்துப்போனமையும், தமிழ்த்தேசியக் கட்சிகளின் வேட்பாளர் தெரிவு மக்களின் மனநிலையை கவனிக்கத் தவறியமையும் அனுர அலை வடக்கிலே சுனாமியாக உருமாற வழிவகுத்தன.

சமூக ஊடகங்கள் மாத்திரம் அவர்களுடைய தேர்தல் வெற்றிக்கு காரணமா ? என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்பதே பதில். சிந்தித்து பாருங்கள்! இம்முறை தேசிய மக்கள் சக்தியின் பதாதைகளையோ, விளம்பரங்களையோ மதில்களிலும் சுவர்களிலும் பரவலாக நாம் கண்டிருக்க மாட்டோம். வீதிகளில் அடிக்கப்பட்ட சின்னங்களையும், இலக்கங்களையுமோ அள்ளி வீசப்பட்ட துண்டுப்பிரசுரங்களையோ பார்த்திருக்க வாய்ப்புக்குறைவு. இந்தப் பணச்செலவையும் நேரத்தையும் அவர்கள் அதிகமான மக்கள் சந்திப்புக்களுக்கும், சிறு சிறு குழுக்களுடனான கலந்துரையாடல்களுக்கும் (Pocket Meeting) பயன்படுத்தியிருக்கிறார்கள். தன்னுடைய வலையமைப்பை(Network) பெருப்பிப்பதிலும் மக்களிடம் தங்களுடைய அடையாளத்தை(Brand) எடுத்துச்செல்வதிலும் சரியான திட்டமிடல்களோடு நிறுவனமயப்படுத்தப்பட்ட அரசியலை சரிவரச் செய்துகொண்டிருக்கிறது தேசிய மக்கள் சக்தி.

இங்கே அர்ச்சுனாவினுடைய ஊசிக்கான சந்தைப்படுத்தல் பொறிமுறையையும் பேசியாக வேண்டும். நாங்கள் சமூக வலைத்தளங்களிலே அவரைப்பற்றி குரைத்துக் கொண்டிருந்த வேளையில் சந்தை, மைதானம் என ஆட்கள் அதிகமாக கூடும் இடங்களுக்கு (அந்த இடத்திலே கசக்கி எறியக்கூடிய பதாதைகள், துண்டுப்பிரசுரம் இல்லாமல் வீடுகளுக்கு கொண்டு செல்லக்கூடியவாறான ) புத்தகத்தோடு புறப்பட்டுச் சென்று அப்பு, ராசா, ஐயா என்று சமூக வலைத்தளங்களோடு தொடர்புறாத மக்களை அணுகிய விதமும், அடிக்கடி ஏதோவொரு பேசுபொருளை கொடுத்து YouTubers மற்றும் Meme Creatorsஐ பயன்படுத்தி இத்தேர்தல் காலம் முழுவதும் மக்களால் உச்சரிக்கப்படும் பெயராக தன்னை தக்கவைத்துக் கொண்டதும் அறிந்தோ, அறியாமலோ அர்ச்சுனா செய்த உத்திகளாகவும் நாம் கற்க வேண்டிய பாடங்களாகவும் பார்க்கலாம்.

சரி இனி நாம் செயற்பட வேண்டிய விடயப்பரப்புக்கு வருவோம். இந்தச்சுனாமியோடு போனவர்களை மீளக்கொண்டுவருவதற்கான பணிகளையும் இதில் தப்பியவர்கள் தாமாகவே அந்தச் சுனாமிக்குள் விரும்பி போகாமல் இருப்பதை தடுக்கும் பணிகளையும் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த்தேசியத்திற்கு(கட்சிகள், சிவில் சமூகங்கள்) இருக்கிறது. தங்களுக்குள்ளே இருக்குற பிணக்குகளை தீர்த்துக்கொண்டு அல்லது தீர்க்காவிட்டாலும் பரவாயில்லை அதை ஒருபுறம் வைத்துவிட்டு மக்களுக்கான அரசியலை செய்ய முன்வரவேண்டும். “தமிழ்த்தேசிய” அணியாக ஒன்றுபட்டு செயற்படாவிட்டால் அடுத்த தேர்தலுக்குள் வடகிழக்கு முற்றுமுழுதாக தன் சுயத்தை இழந்து நிற்கும் என்பதிலே ஐயமில்லை.

வெறுமனே விமர்சிக்கின்ற, அடுத்தவர் மீது சேறு பூசுகின்ற அழுக்கான அரசியல் பாணியை கைவிட்டு பயனுறுதிமிக்கதாக அரசியலை கேள்விக்குட்படுத்த வேண்டியதும் ஆழமாக ஆராய வேண்டியதும் மிகமுக்கியமாகும். அனைத்து மக்களும் பங்கேற்கக்கூடிய ஆக்கபூர்வமான கருத்துருவாக்கத் தளங்களை கொண்டதுமான “ஆரோக்கியமான

அரசியல் கலாசாரத்தை" துடிப்பான, கொள்கைப்பற்றான இளைஞர்களையும் ஆலோசனைகளை வழங்கக்கூடிய அனுபவமிகு மூத்தோரையும் இணைத்துக் கட்டியமைக்க வேண்டியதும் கட்டாயமாகும்.

எமது கொள்கைகளையும் சித்தாந்தங்களையும் மக்கள்மயப்படுத்த வேண்டியதும், அந்த தெளிவினூடாக மக்களை திரட்சியடையச் செய்ய வேண்டியதும் அவசியமாகும். மக்களுடைய அத்தியாவசிய, அன்றாடப் பிரச்சினைகளுக்கான உடனடித் தீர்வுகளை முன்வைக்கக் கூடிய ஸ்திரமான பொருளாதார, சமூக கட்டமைப்புக்களையும் ஒருசேர உருவாக்கி அரசியல் கட்சிகள் தமிழர் தேசமெங்கும் அலகுகளாக நிறுவனமயப்படுத்தப்படல் வேண்டும். தனக்குள்ளே இருக்கின்ற பிற பிரிவினைவாதங்களான பிரதேசவாதம், மதவாதம், சாதியவாதம் என்பவற்றை விடுத்து பிற்போக்குத்தனங்களை களைந்து தனது அகச்சூழல் குறித்து தீவிர சுயபரிசீலனை செய்துகொண்டு மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றத்தோடு "நவீன தமிழ்த்தேசியம்" விரைவில் மலர்ந்தாக வேண்டும்.

இவன் ,
இன்றைய தலைமுறையுள் ஓர்
நவீன தமிழ்த்தேசியவாதி

## விசைப்பலகையில் F, J ஆகிய பட்டன்களில் மாத்திரம் கோடு இடப்பட்டிருப்பது ஏன் ?




கீபோர்டில் உள்ள நடு வரிசை முகப்பு வரிசை விசை நிலை என்று அழைக்கப்படுகிறது. F மற்றும் J விசைகளில் உங்கள் இடது மற்றும் வலது கைகளை வைத்தவுடன், நீங்கள் விசைகளை அணுகுவது மிகவும் எளிதாகிறது என்பதை நீங்கள் காண்பீர்கள்.

நடுக் கோட்டில் கைகளை சரியான நிலையில் வைப்பதன் மூலம், மேல் மற்றும் கீழ் கோடுகளில் நகர்த்துவது மிகவும் எளிதாகிறது. இங்கே விரல்களை வைப்பதன் மூலம் உங்கள் இடது கை A, S, D மற்றும் F ஆகியவற்றை உள்ளடக்கியது. அதேசமயம், வலது கை J, K, L மற்றும் (;) ஆகியவற்றை உள்ளடக்கியது. இந்த நேரத்தில் இரண்டு கட்டைவிரல்களும் ஸ்பேஸ் பாரில் இருக்கும்.




எளிதில் கீழே பார்க்காமல் வேகமாக டைப் செய்வதற்கும், கண் தெரியாதவர்கள் உபயோகப்படுத்துவதற்கு எளிமையாக இருக்கவும் இந்த கோர்டுகள் கொடுக்கப்பட்டுள்ளது.

# 4 தொடர்கதை - கண்ணியவான்



வீட்டின் தலைவனாக தன் கடமைகளை சரிவர செய்யாமல் ஊதாரியாய் சுற்றும் செந்திலை பார்க்கும் போது, அவனை நம்பி, அவன் கரம் பிடித்த கண்மணி கதிகலங்குகிறாள். படிப்பறிவு இருந்திருந்தாலும் தைரியமாக வெளியே வந்திருப்பாள். அதுதான் கிடைக்கவில்லையே! ஊர்ப்பேச்சிற்கு அஞ்சி "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்" என கலங்கி கலங்கி வாழ்க்கையை நடத்துகிறாள். நகரப்பகுதியாய் இருந்திருந்தால் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் பற்றியாவது தெரிந்திருக்கும். அதற்கும் வழியற்று போக குடும்ப வறுமையிலும் எட்டு குழந்தைகளுக்கு தாயானாள். இறைவன் புண்ணியத்தில் குழந்தைகள் அனைவரும் ஆரோக்கியமானவர்களாக இருந்தனர். இறுதி பிரசவத்தில் அவளுடைய வேதனையை உணர்ந்த வைத்தியரே அவளுக்கு குடும்பக்கட்டுப்பாடு பற்றிய விளக்கத்தை கொடுத்தார்.

குடும்பத்தின் தலைப்பிள்ளையான ரத்தினம் சிறுவயது முதலே தன் தந்தையின் தீய சகவாசங்களால் தன் குடும்பம் சீரழிவதை பார்த்து வளர்கிறான். ஆண்பிள்ளைகள் அனைவருக்கும் தாயின் மீது அளவுகடந்த பிரியம் இருந்தாலும், அவர்களுடைய முன்மாதிரி எப்பொழுதும் தந்தையாக தான் இருக்கிறார். சிறுவர்களாய் இருக்கும் போது தந்தையின் தவறுகளை சுட்டிக்காட்டும் பெரும்பாலான ஆண்பிள்ளைகள், தங்களுடைய வாலிப பருவத்திலோ அல்லது அந்த பருவத்தை தாண்டும் போதோ தன் தந்தை இழைத்த அதே தவறுகளை ஆண்மையின் அடையாளம் என்றெண்ணி, அதனையே செய்ய முற்படுகின்றனர். எந்த நேரத்திலும் என் தந்தையை போல் ஆகிவிடக்கூடாது என்பதே ரத்தினத்தின் அதிகபட்ச குறிக்கோளாக இருந்தது.

குடும்ப வறுமையிலும் தன் குழந்தைகளிற்கு போதிய கல்வியறிவினை வழங்க வேண்டும் என்றெண்ணிய கண்மணி கூலி வேலைகளுக்கு செல்கிறாள். தாயின் வேதனையை உணர்ந்த குழந்தைகள் அவளுக்கு அதிக சிரமம் கொடுக்காது இயல்பாகவே கற்கும் ஆர்வத்தை கொண்டிருந்தனர். அதிலும் தலைப்பிள்ளை ரத்தினம் அம்மாவிற்கும், தன் சகோதரர்களுக்கும் உதவியாக இருந்துகொண்டு தன் சாதாரணதர கல்வி நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறான். தந்தை வழிகாட்டியாய் இருக்க வேண்டிய குடும்பத்திற்கு தனயன் வழிகாட்டியானான்.

தாய் கூலிவேலைக்கு செல்வதை விரும்பாத ரத்தினம் சுயதொழில் ஒன்றை மேற்கொள்ள விரும்பினான். அதற்காக தன் நண்பர்களிடமும், ஆசிரியர்களிடமும் ஆலோசனை கேட்கிறான். ரத்தினத்தை பற்றி நன்றாக தெரிந்த ஆசிரியர்கள் எந்தவித எதிர்பார்ப்புமின்றி தாமாகவே அவனுக்கு நிதி உதவியினை செய்ய முன்வந்தனர். இருப்பினும் ரத்தினம் அந்த உதவியை ஏற்க முற்படவில்லை. இறுதியில், வியாபாரம் சீரான நிலையை அடையும் போது பணம் மீள தரப்படும் எனும் ஒப்பந்தத்துடன் ஆசிரியர்களின் உதவியை ஏற்றுக்கொள்வதாக கூறினான். வீட்டிற்கு சென்று தாயிடமும், சகோதரர்களிடமும் இந்த விடயத்தை பற்றி கலந்தாலோசிக்கிறான். எவ்வளவு வறுமை இருந்த போதும் யாரிடமும் கடன் வாங்கும் எண்ணம் கண்மணிக்கு இருந்ததில்லை. கிடைப்பவற்றில் பிள்ளைகளுக்கு ஒரு வாய் கஞ்சி ஊற்றி தன்னை காயப்போடுவாளே தவிர கடன் என்று இதுவரை யார் வீட்டு வாசலிலும் போய் நின்றதில்லை. இப்படிப்பட்ட எண்ணம் கொண்டவளுக்கு, ரத்தினத்தின் யோசனை தயக்கத்தை கொடுத்தது.

சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேருமா? என எண்ணிணாள். முடிவெடுக்க தனக்கு சிறிது அவகாசம் வேண்டும் என ரத்தினத்திடம் கூறினாள். தாய் மீது நம்பிக்கை கொண்டவனாய் "சீக்கிரம் சொல்லம்மா" என கூறிச்சென்றான். இரண்டு நாட்களின் பின், ஒரு லட்சம் ரூபாய் பணத்தை கொண்டுவந்து ரத்தினத்தின் கைகளில் நீட்டினாள் கண்மணி. இரண்டு வருடமாக நான் வேலை செய்யும் வீட்டுக்காரரிடம் சீட்டு போட்டிருந்தேன். உனது திட்டத்தை பற்றி அவர்களிடம் கூறி பணம் வேண்டும் என கேட்டேன். இன்று தான் சீட்டு கூறும் நாள். பணத்தை வந்து பெற்றுக்கொள்ள சொன்னார்கள். உன்னுடைய திட்டத்திற்கு இந்த பணம் போதும் தானே என கேட்டார். தன்னுடைய முத்துப்பற்கள் அனைத்தும் தெரிய நிச்சயமாய் இது போதும் அம்மா என கூறினான்.

மறுநாள், தனக்கு உதவ முன்வந்த ஆசிரியர்களுக்கும், நண்பர்களுக்கும் நன்றி கூறினான். பின் வீடு திரும்பியவன், தனது திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான பொருட்களை வாங்கி வந்தான். உணவு தயாரிப்பதற்கு தேவையான பொருட்களும், சில கட்டுமானப்பொருட்களும் வீட்டிற்கு கொண்டு வந்து கொடுக்கப்பட்டன. சகோதரர்களது உதவியுடன் வீட்டின் கொல்லைப்புறத்தில் தற்காலிக கோழிக்கூடு ஒன்றையும் அமைத்துக்கொண்டான். அம்மாவின் கைப்பக்குவத்தை நன்றாக அறிந்திருந்ததனாலாயே அவனால் இப்படியொரு திட்டத்தை வகுக்க முடிந்திருந்தது.

நான்கு நாட்களின் பின் இரவு உணவு நேரத்தில் அனைவரும் ஒன்றாக இருக்கும் போது தன் திட்டத்தை விளக்கினான். சிற்றுண்டி தயாரிப்பதற்கு தேவையான பொருட்கள் இப்போது வீட்டில் உள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் அம்மா குறித்த அளவிலான சிற்றூண்டிகளை செய்து தரவேண்டும். அதை தம்பிமார் வெவ்வேறு இடங்களில் கொண்டு சென்று விற்று வர வேண்டும். தங்கைகள் வீட்டில் வளர்க்கப்படும் கோழிகளை கவனமாக பராமரிக்க வேண்டும். உடனடியாக நாம் நினைக்கும் அளவிற்கு இலாபம் பெற முடியாது. ஆனால், விடாமுயற்சியுடன் கடினமாக உழைத்தால் சுமார் மூன்று, நான்கு மாதங்களில் வீட்டு நிலை சரியாகும் என கூறினான். தமையனின் பேச்சிற்கு அனைவரும் தலையசைத்தனர்.

திட்டத்தினை செயற்படுத்தும் நாள் வந்தது. ஒரு திறப்பு விழாவாக அதை கொண்டாடும் பொருளாதார நிலைமை ரத்தினத்திற்கு தற்போது இல்லை எனினும் தனக்கு உதவி செய்ய எண்ணியவர்கள் தன் அருகில் அன்றைய தினம் இருக்க வேண்டும் என்றெண்ணி அவனுடைய பாடசாலை ஆசிரியர்கள் சிலரையும், நண்பர்களையும் அழைத்திருந்தான். அனைவருடைய முன்னிலையிலும் கண்மணி சில சிற்றூண்டிகளை தயாரித்துக்கொடுக்க, பிள்ளைகள் அதனை வந்திருந்தவர்களுக்கு பரிமாறினார்கள். நலன்விரும்பிகளாக வந்திருந்த ரத்தினத்தின் ஆசிரியர்களும், நண்பர்களும் அவனது முதல் வாடிக்கையாளர்கள் ஆனார்கள்.

சங்கீதன் பவித்திரா
திருக்கோணமலை



# 5 அனுபவ பகிர்வு

## 5.1 பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது மற்றும் அதை பதிவு செய்யும் போது நான் எதிர்கொண்ட சவால்கள்:

உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்த பிறகு, சில மாதங்களுக்குப் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் முதல் விண்ணப்பச் செயல்முறை (1st Form) ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில், நான் Z-Score அடிப்படையிலும், எனது விருப்பங்களுக்கு ஏற்ப கற்கைநெறிகளைத் தேர்ந்தெடுத்து, UGC இன் இணையதளத்தின் மூலம் விண்ணப்பச் செயல்முறையை மேற்கொண்டேன். சில முக்கிய கற்கைநெறிகள், உதாரணமாக Architecture (Moratuwa பல்கலைக்கழகம்) போன்றவை, தனிப்பட்ட உளச்சார்பு பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது. இதற்கமைவாக, Moratuwa பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உளச்சார்பு பரீட்சையை நான் எழுதினேன்.

பின்னர், UGC எனது Z-Score மற்றும் விருப்ப ஒழுங்கு அடிப்படையில் Nursing - Jaffna University கற்கைநெறியை ஒதுக்கியது. இது தொடர்பான தகவல் எனக்கு SMS மற்றும் G-mail மூலம் அறிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட நாளுக்குள் அனுமதியை பதிவு செய்ய வேண்டும் என்பதால், இவை அடிக்கடி சரிபார்ப்பது அவசியம் என்பதை உணர்ந்தேன்.

எனது உடல்நிலையும், வசதிகளையும் கருத்தில் கொண்டு, Eastern University-க்கு இடமாற்றம் (Appeal) செய்வதற்கான விண்ணப்பத்தை அனுப்பினேன். மேன்முறையீட்டு விண்ணப்பத்தை உறுதிப்படுத்திய பிறகு, UGC இன் முதல் வெற்றிட நிரப்பலில் (1st Waiting List) எனக்கு Food Science & Technology - Sabaragamuwa University கிடைத்தது. இதனை பதிவு செய்ய தவறினால் முன்னதாக கிடைத்த Nursing கற்கைநெறியும் இழக்கப்படும் என்பதால், இதனை உடனடியாக பதிவு செய்தேன்.

தொடர்ந்து, Eastern மற்றும் Jaffna பல்கலைக்கழகங்களுக்கு மேலும் மேன்முறையீட்டுகளை அனுப்பினேன், இதில் Jaffna பல்கலைக்கழக Dean இன் பரிந்துரை கடிதத்தையும் இணைத்தேன்.
முடிவாக:

- Jaffna University Appeal ஏற்கப்பட்டதால், எனது Course-ஐ மாற்றி அங்கு கற்கத் தொடங்கினேன்.
- மூன்று மாதங்களின் பின்னர், Eastern University Appeal ஏற்கப்பட்ட தகவலும் SMS மூலம் வந்தது, ஆனால் நான் Jaffna University கற்கைநெறியில் தொடர்ந்து இருந்தேன்.

இந்த அனுபவம் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பல நடைமுறைகளை மற்றும் எதிர்கொள்ளக்கூடிய சவால்களை விளங்கச்செய்தது. முக்கிய தகவல்களை சரியான நேரத்தில் சரிபார்த்து, தெளிவாக முடிவெடுப்பது மிகவும் அவசியமானது என்பதை உணர்த்தியது.

# 5.2 Excel

அலுவலக பணிகளுக்காக பயன்படுத்தப்படும் Microsoft Office தொகுப்பில் உள்ள செயலிகளுள் excel உம் ஒன்றாகும். மென்பொருளான இது பல தரவுகளை (Data) வகைப்படுத்த, கணக்கீடு செய்ய, மற்றும் கணினி பரிசோதனைகள் நடத்த உதவுகிறது. Microsoft Excel உலகளாவிய அளவில் காணப்படும் மிகவும் பிரபலமான Spreadsheet Software ஆகும். எதிர்கால உலகில் பயணிக்கவும், இளைஞர்களுக்கான தொழில்சார் மற்றும் கல்வி அபிவிருத்திக்கான எதிர்காலத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக தளம் அமைப்பினால் இந்த Excel கற்கைநெறியானது தளம் 20.10.2024 அன்று ஆரம்பிக்கப்பட்டது. திருக்கோணமலையை சேர்ந்த சேர்ந்த 06 இளையோர் பங்குகொண்ட இவ் வகுப்பில் பல்வேறு நுட்பங்கள் கற்பித்து தரப்பட்டது.

எமக்கான பயிற்றுவிப்பாளராக Dr. சி. ஹயகிரிவன் அண்ணா அவர்கள் செயற்பட்டார். எமக்கான வகுப்பு நேரங்களும் அவருடன் கலந்து பேசி தீர்மானித்துக்கொள்ள இலகுவாக இருந்தது. Dr. சி. ஹயகிரிவன் அண்ணாவின் கற்பிக்கும் பாங்கானது மிகவும் எளிய முறையில் எமக்கு விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு functions உம் உதாரணங்கள் மூலம் கற்பித்து தந்தார். இதனால் விரைவாகவும் இலகுவாகவும் functions ஐ கற்றுக்கொள்ள முடிந்தது.

வகுப்பில் கற்றவற்றை வீட்டில் பயிற்சி செய்து பார்த்துக் கொள்ளக்கூடியதாகவும் மேலதிகமான சந்தேகங்களை வகுப்பில் கேட்டறிந்தும் கற்றுக்கொண்டோம். எமது Microsoft Excel வகுப்பிலே Excel என்றால் என்ன என்பதைப்பற்றிய முழு விளக்கமும் பெற்றுக்கொண்டோம்.ஒவ்வொரு கணித்தல்களையும், நுட்பங்களையும், குறுக்கு வழிமுறைகளையும் கற்றுக்கொண்டோம். உதாரணமாக,Sum, Sumif, If, Add, Min, Max, Average, Count, Count if, Lookup, Median, Left, Right, Value, Age calculation, Current time ,Day order, Serial Number. இந்த கற்கைநெறியின் மூலம் Microsoft Excel ல் எவ்வகையான கணித்தல்களை மேற்கொள்ள முடியும் என அறிந்து கொண்டதோடு அதனை எவ்வாறு? எங்கே? உபயோகப்படுத்த வேண்டும் என்ற விளக்கங்களையும் அறிந்து கொண்டோம். கணித்தல்களை வினைதிறனாக மேற்கொள்ளுதல், வரைபடங்களை உருவாக்குதல் போன்ற அடிப்படை வசதிகளை உள்ளடக்கியதாக இம் மென்பொருளில் கணித்தல்களை மேற்கொள்வதற்கான குறியீடாக "=" இடப்படுகிறது.

இந்த கற்கைநெறியானது மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.அதேபோல் Microsoft word போன்ற வகுப்புக்களை வைப்பதும் சிறந்தது. ஏனென்றால் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் தொழில் புரிவோருக்கும் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் project, presentation செய்தல் போன்றவை உள்ளன . அது தொடர்பான முழுமையான விளக்கம் பெரும்பான்மையானோருக்கு தெரியாது இதனை காட்டிக்கொள்ளவும் மாட்டார்கள். எனவே தங்களால் வழங்கப்படுகின்ற இந்த வழிகாட்டல் கற்கைநெறியானது எமக்கு மிகவும் பயனுள்ளதான அமைந்ததைப் போல் மேலும் பல இளையோருக்கும் கிடைக்கப்பெறுதல் அவசியமானது.



துஷாரகா கோணேஸ்வரன்

# 6 அகத்தியர் தாபனம் - திருக்கரசையம்பதி

 

ஈழத்திருநாட்டின் கிழக்குமாகாணத்தில் திருக்கோணமலை மாவட்டத்தின் கங்குவேலிக்கிராமத்தில் மகாவலி கங்கைக்கு அருகாமையில் அகத்தியர் தாபனம் எனப்படுமிடத்தில் வனம் சூழ்ந்த பகுதியில் திருக்கரசையம்பதி ஆலயம் அமைந்துள்ளது. இப்பதியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் ஆலயம் குறித்த வரலாற்றை திருக்கரசைப்புராணம் மூலம் அறியமுடியும். யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் எழுந்த இவ்விலக்கியத்தை இயற்றிய புலவரை அறியுமாறில்லை எனினும் குருவணக்கம், புராணவரலாறு எனும் பகுதிகளுள் வரும் தொடர்கள் உமாபதி சிவாச்சாரியாரைக் குறிக்கின்றமையால் இந்நூலை அவரது சீடர்கள் யாரேனுமோ அல்லது அவர் மரபிலுள்ளோர் ஆக்கியிருக்கலாமென அறிஞர் கருதுகின்றனர்.

அகத்திய மாமுனிவரால் நிறுவப்பட்டு பூசிக்கப்பட்ட சிவலிங்கம் இப்பதியிலே காணப்படுவதால் அகத்தியர் தாபனம் என அழைக்கப்படுகின்றது. இராவணனுக்கும் அகத்தியருக்கும் சாமகான இசைப்போட்டி நிகழ்ந்த இடம் இதுவெனவும் நம்பப்படுகின்றது. அகத்தியர் அமைத்ததாக கூறப்படும் சிவாலயம் அந்நியர் படையெடுப்புக்களால் சிதைவடைந்தது போக ஆலய நிர்வாகிகளால் எஞ்சிய பாகங்கள் சேகரித்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள கருங்கற்றூண்கள் சிலவற்றில் திரிசூல அடையாளம் தெளிவாக தென்படுகின்றது. இவைதவிர சில கற்களில் உட்குடைவுகளும் காணப்படுகின்றன.

தமிழர் பண்பாடின் எச்சங்கள் நம் கண்முன்னே சிதைவுறுவதும் அழிக்கப்படுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றல்ல. அவ்வடிப்படையிலேயே, இவ் ஆலயம் சார்ந்த தொல்பொருட்களில் அதிகமானவை காணாமல் போய் சொற்பமானவையே எஞ்சியுள்ளமை கவலைக்குரிய விடயமாகிறது. ஈழத்திலக்கியச் செல்நெறியில் திருக்கரசை புராணம் பற்றிய விளக்கம் பலர் மத்தியில் அவ் ஆலய அமைப்பு பற்றி பல்வேறு எண்ணவோட்டங்கள் எழுந்திருக்கும். எனினும், அவற்றை பொய்ப்பிக்கும் வகையில், தென்னோலையால் வேயப்பட்ட சிறுகுடிசையிலேயே ஆலய இறைவன் ஈசன் எழுந்தருளியுள்ளார்.

தற்போது ஆலயக்கட்டுமானப்பணிகள் நடைபெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும். ஆலயத்திற்கு செல்லும்பாதை காட்டுப்பாதையாகவும் யானைபோன்ற வனவிலங்குகளுக்கு குறைவில்லாததாகவும் காணப்படுவதாக திருக்கரசைப்புராணம் பின்வருமாறு கூறிநிற்கின்றது,

"காடெலாங் கரிநல்யானை கரையெலாம் பவளக்குப்பை
நாடெலா மிரத்ன ராசி நகரெலாம் நல்லோர் சங்கம்
வீடெலாஞ் செம்பொற்கூரை வெளியெலாஞ் செந்நெற் குன்றங்
கோடெலாம் மஞ்ஞை யீட்டம் குழியெலாங் கழுநீர்ப் போது" .

இச்சிவாலயத்திற்கு செல்லும் வழி குன்றுங்குழியுமாக மிக மோசமானநிலையில் காணப்படுவதோடு பொதுப்போக்குவரத்துவசதிகள் முற்றாக அற்றநிலையில் தனிநபர் வாகனங்களிலே சென்று தரிசிக்கும் நிலை காணப்படுகின்றது. ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள தமிழர்தம் பயிர்செய் நிலங்கள் சூறையாடப்பட்டுள்ளதோடு ஆலய கட்டுமானங்களுக்கும் இடையூறுகள் விளைவிக்கப்படுவதாக பிரதேசமக்கள் கவலை தெரிவிக்கிப்பட்டுள்ளன.


அகத்தியமா முனிவரின் பாதத்தடங்கள்


ஆலய சிதைவுகள்

அரசியல்வாதிகளின் அலட்சியப்போக்கினால் நாள்தோறும் அல்லல்களுக்குள்ளாகும் தமிழ்மக்கள் ஆலயபரிபாலன சபையை உறுதிபடஅமைத்து நல்ல தலைவரை தெரிவுசெய்துள்ளதாகவும், அவர் ஆக்கிரமிப்புக்களை எதிர்த்து ஆலயநற்பணிகளை ஆற்றுவதாகவும் தம்நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர்.

தமிழர்தம் தொன்மையினதும் நாகரிகத்தினதும் இருப்பிடம் இவ்விதம் கவனிப்பாரற்று நாள்தோறும் நலிவுக்குள்ளாக நாம் வேடிக்கை பார்த்திருப்பது எமக்கும், எமது அடுத்த தலைமுறையினருக்கும் அனுகூலமான விடயமாகாது. நமது பண்பாட்டின் எச்சங்களையும் தொன்மையையும் திட்டமிட்டு அழிக்கும் சக்திகளுக்கு அப்பால் நமது உதாசீனத்தால் நமது இனத்தின் பண்பாட்டு அடையாளங்கள் அழிந்து பொய்விடக்கூடாது அதனை பாதுகாப்பது தமிழராகிய எமது தலையாய கடமையாகும்.

# 7 இலங்கை பாராளுமன்ற தேர்தல்

நாட்டின் ஜனநாயகம் என்பது மக்கள் செல்வாக்கையும், அவர்களது உரிமைகளையும் அடிப்படையாகக் கொண்டு இயங்கும் அரசியல் அமைப்பு ஆகும். இதன் அத்திவாரமாக இருந்து அதனை வலுப்படுத்த இளையோரின் பங்கு அவசியமானது. இளையோர்களது திறமைகள் மற்றும் அவர்களது கருத்துக்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்கான உந்து சக்தியாக அமைகின்றன.

நாட்டின் இளையோர்கள் அரசியல் சிந்தனைகளை உருவாக்குதல், சமூக மாற்றங்களை ஊக்குவித்தல் மற்றும் மக்கள் உரிமைகளை நிலைநிறுத்துதல் என்பவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இதன் மூலம் தமது சமூகத்தின் குறைகளை நிவர்த்தி செய்து நாட்டின் அபிவிருத்தியில், சமூக மற்றும் அரசியல் அமைப்புகளில் முக்கிய மாற்றங்கள் நிகழ்த்தப்பட பங்குதாரர்களாகின்றனர்.

இலங்கையினை பொறுத்த வரையில் முன்னைய அரசியல் செயற்பாடுகளில் தமிழ் இளையோரின் பங்கு பின்தங்கிய நிலையில் காணப்பட்டாலும், இம் முறை நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் ஒப்பிட்டளவில் அதிகமாகவே உள்ளது. பாராளுமன்ற பொதுத் தேர்தல் என்பது, நாட்டின் அரசியல் அமைப்பில் ஒரு முக்கிய அம்சமாகும். இதன் மூலம், நாட்டின் 225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தை மக்கள் விகிதாசார தேர்தல் முறை மூலம் தேர்வு செய்கின்றனர். இதில் 196 பேர் உள்ளூர் தேர்தலின் மூலமும் 29 பேர் தேசிய பட்டியலின் அடிப்படையில் கட்சிகள் மூலமும் தேர்வு செய்யப்படுகிறார்கள். இலங்கை சுதந்திரமும், இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஒற்றையாட்சி உடைய அரசாகும். பௌத்த நாடாக திகழும் இலங்கையில் 05 வருடங்களுக்கு ஒரு முறை என பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, புது அமைச்சரவை கூட்டப்படுகிறது.

இலங்கை, 14.11.2024 அன்று நடைபெறும் பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான ஒழுங்குகளை தயாரித்து வருகின்றது. இந்த தேர்தலில், தமிழ் பிரச்சினைகள் மற்றும் தமிழ் மொழி பேசும் மக்கள் தொடர்பான பிரதிநிதிகள் முக்கிய பங்காற்றுகின்றனர். தமிழ் சமூகத்தின் அரசியல் நிலை மற்றும் அவர்களின் எதிர்காலம் குறித்த இந்த தேர்தல் வரலாற்றில் அத்தியாவசியமாகும். இலங்கையின் 15 மற்றும் 29 வயதுடைய தனிநபர்களை உள்ளடக்கிய இளைஞர்கள், நாட்டின் அரசியல் நிலப்பரப்பை வடிவமைப்பதில், குறிப்பாக பாராளுமன்ற பொதுத் தேர்தல்களின் போது முக்கிய பங்கு வகிக்கின்றனர். இந்த வயதிற்குட்பட்ட வாக்காளர்கள் கிட்டத்தட்ட 30% இருப்பதால், ஜனநாயக செயல்பாட்டில் அவர்களின் ஈடுபாடு மாற்றத்தை வளர்ப்பதற்கும், அரசியல் உரையாடலைத் தூண்டுவதற்கும், அவர்களின் தலைமுறையைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் முக்கியமானதொன்றாகும்.

வரலாற்று ரீதியாக, இலங்கை அரசியலில் இளைஞர்களின் ஈடுபாடு உற்சாகம், கொந்தளிப்பு எனும் இரண்டாலுமே குறிக்கப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில்,

இளைஞர்கள் குறிப்பிடத்தக்க இயக்கங்களில் முன்னணியில் இருந்தனர். ஜனநாயகம், சமூக நீதி மற்றும் இன நல்லிணக்கத்திற்காக வாதிட்டனர். இருப்பினும், முரணான காலங்கள் முறையான அரசியல் செயல்முறைகளில் அவர்களின் பங்கேற்பை பெரும்பாலும் மட்டுப்படுத்தியுள்ளன. நிர்வாகத்தில் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் உந்துதல் உள்ளிட்ட சமீபத்திய முன்னேற்றங்களால் அரசியலில் இளைஞர்களின் பங்குபற்றல் ஆர்வத்தை மீண்டும் தூண்டியுள்ளன. நாடாளுமன்றத் தேர்தல்களில் இளைஞர்கள் தாக்கத்தை ஏற்படுத்தும் மிக முக்கியமான வழிகளில் ஒன்று வாக்காளர்களின் எண்ணிக்கையாகும். பழைய தலைமுறையினருடன் ஒப்பிடும்போது இளைய வாக்காளர்களிடையே குறைவான பங்கேற்பு பொதுவான போக்கு இருந்தபோதிலும், தேர்தல் செயல்முறை பற்றிய விழிப்புணர்வையும் கல்வியையும் அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகள் நேர்மறையான முடிவுகளைத் தரத் தொடங்கியுள்ளன. சமூக ஊடகப் பிரச்சாரங்கள், இளைஞர்கள் தலைமையிலான அமைப்புக் கல்வித் திட்டங்கள் பெருமளவில் வாக்காளர்களைத் திரட்டி, ஊக்கமளிக்கிறது.

வேலைவாய்ப்பு, கல்வி, காலநிலை மாற்றம் மற்றும் மனித உரிமைகள் போன்ற தம்மை நேரடியாகப் பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து இலங்கையில் இளைஞர்கள் அதிகளவில் குரல் கொடுத்து வருகின்றனர். சமூக ஊடகத்தளங்களைப் பயன்படுத்துவதற்கான அவர்களின் திறன் இந்த பிரச்சினைகள் சார்ந்து திறம்பட வாதிட அனுமதிக்கிறது, அரசியல் உரையாடலுக்கான புதிய இடத்தை உருவாக்குகிறது. விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், பொறுப்புக்கூறலைக் கோருவதன் மூலமும், இளைஞர்கள் அரசியல் கட்சிகள் தங்கள் கவலைகளை அறிக்கைகள் மற்றும் கொள்கை முன்மொழிவுகளில் நிவர்த்தி செய்ய நிர்பந்திக்கிறார்கள், அதன் மூலம் தேர்தல் நிகழ்ச்சி நிரலில் தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள்.

மேலும், அரசியல் கட்டமைப்புகளில் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்க கவலையாக உள்ளது. தேசிய இளைஞர் கொள்கை போன்ற முன்முயற்சிகள் இளம் தலைவர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டாலும், நாடாளுமன்றத்தில் இளைஞர்களின் உண்மையான இருப்பு குறைவாகவே உள்ளது. தேர்தல்களில் அதிகமான இளைஞர் வேட்பாளர்களுக்காக வாதிடுவது இந்த இடைவெளியைக் குறைக்கும், முடிவெடுக்கும் செயல்முறைகளில் இளைய தலைமுறையினரின் முன்னோக்குகள் போதுமான அளவு பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது.
திறமை இருந்தும், இளம் வாக்காளர்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். தகவலுக்கான அணுகல் இல்லாமை, அரசியல் அக்கறையின்மை மற்றும் பாரம்பரிய அரசியல் கட்சிகள் மீதான ஏமாற்றம் ஆகியவை பெரும்பாலும் அவர்களின் ஈடுபாட்டைத் தடுக்கின்றன. கூடுதலாக, சமூக-பொருளாதார நிலப்பரப்பு, இளைஞர்களிடையே அதிக வேலையின்மை விகிதங்களால் குறிக்கப்படுகிறது, இது உரிமையின்மை உணர்வுகளுக்கு வழிவகுக்கும்.

இலங்கையின் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் இளைஞர்களின் பங்கு இன்றியமையாதது. வாக்காளர்கள், வக்கீல்கள் மற்றும் புதுமைப்பித்தன்கள் என, அவர்கள் தங்கள் தலைவர்களிடம் இருந்து மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் பொறுப்புக்கூறலைக் கோருவதற்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளனர்.

இருப்பினும், அவற்றின் தாக்கத்தை அதிகரிக்க, அவர்கள் எதிர்கொள்ளும் தடைகளை நிவர்த்தி செய்வது மற்றும் செயலில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் சூழலை உருவாக்குவது முக்கியம். இளைஞர்களை வலுவூட்டுவதன் மூலம், இலங்கை தனது ஜனநாயகம் துடிப்பானதாகவும், அனைத்து குடிமக்களின் தேவைகளுக்கும் பதிலளிக்கக்கூடியதாகவும் இருப்பதை உறுதிசெய்து, மேலும் உள்ளடக்கிய மற்றும் வளமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கும்.





ஜெயச்சந்திரன் கோபிநாத்
உவர்மலை



# பால், பால் நிலை வேறுபாடு



இனப்பெருக்கத் தேவைகளின் காரணமாக உயிரியல் ரீதியான வேறுபாடுகளுடன் ஆண், பெண் என படைக்கப்பட்டிருப்பதை பால் என வரையறை செய்யலாம்.

பால்நிலை எனும் அடிப்படையில் நோக்குமிடத்து ஒவ்வொரு மனித உயிரும், உயிருடன் வாழ்பவரும் ஆண், பெண் என பிறப்பின் போதே பிரிக்கப்படுகின்றனர். அவ்வாறே நபர் ஒருவரின் பால் தீர்மானிக்கப்படுகின்றது. இப் பால் நிலைக்கு அப்பால் ஆண்கள், பெண்கள், சிறப்பம்சங்கள், பண்பாடுகள், வகிபாகங்கள், எதிர்பார்ப்புக்கள், நடத்தைக் கோலங்கள், மொழி மற்றும் மாறா நிலை என்பவற்றை சமூகம் தூண்டுகிறது. இதுவே பால்நிலை எனப்படுகின்றது. அதாவது சமூகத்தினால் ஆண்களுக்கும், பெண்களுக்கும் விதிக்கப்படும் குண இயல்புகளும் அவை தொடர்பான பாத்திரங்களையும் குறிப்பனவாகும்.

இயற்கையில் பிறப்பின் அடிப்படையில் வரும் பால் என்னும் எண்ணக் கருவானது சமூகமயமாக்கல் செயற்பாட்டின் மூலம் ஏற்படுத்தப்படுமிடத்து அது பால்நிலை எனப்படுகின்றது. பால் மாறாத் தன்மை உடையது. பால் நிலை மாறும் தன்மை உடையது. உதாரணமாக ஒரு பெண் தாய்மை அடைவதை மாற்ற முடியாது. ஆனால் ஒரு ஆணால் செலுத்தக்கூடிய கனரக வாகனங்களைச் செலுத்த முடியும். விண்வெளிக்குச் செல்ல முடியும். நாடாளவும் முடியும். இவ்வாறு பால், பால்நிலை என்பதை வரையறுத்து வேறுபடுத்தி அறிய முடியும்.

# 8 இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

1980ம் ஆண்டில் நிறுவப்பட்ட இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முக்கிய குறிக்கோள், தொழிலாளர்கள், பெண்கள், கிராமப்புற மக்கள் மற்றும் சமூகத்தில் பின் தங்கியுள்ளவர்களுக்கான கல்வி வாய்ப்புகளை வழங்குவதாகும்.

ஆண்டு தோறும் இப் பல்கலையில் பல்வேறு படிப்புகளுக்கு மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சான்றிதழ் படிப்புகள், Undergraduate, Postgraduate போன்ற கல்வித் திட்டங்களின் கீழ், Distance Learning, இணைய வாய்ப்பு, பாடங்கள் மற்றும் கையேடுகள் முதலான கற்றல் முறை மூலம் கல்வியை புகட்டும் ஓர் கல்வி சேவை மையமாக திறந்த பல்கலைக்கழகம் விளங்குகிறது.

Undergraduate படிப்பில் Business Management, Computer Science, Social Sciences, Chemistry, Biology, Physics, Arts and Humanities, Commerce, Environmental Science போன்ற கற்கைநெறிகளும், முதுகலை படிப்பு (Postgraduate Programs) இல் Master of Science, Management, Social Science, Educational Science, Technology Management போன்ற கற்கைநெறிகளும், Diplomas and Certificate Programs சார்ந்து Computer Science, Technology Education, Social and Development Studies, Environmental Studies, Educational Psychology முதலான கற்கைநெறிகளும் இப் பல்கலைக்கழத்தில் உள்ள பாட நெறி வகைகளாகும்.

வணிகத் துறையில் தகுதியான நிர்வாகத் திறன்களையும், மேலாண்மையில் தீர்வு காணும் திறன்களையும் மாணவர்களுக்கு கற்பிக்க வடிவமைக்கப்பட்டுள்ளதாக Business Management காணப்படுகிறது. இவ் வகைக்குள் BBA, BBM போன்ற பட்டப்படிப்புக்கள் உள்ளடங்குகின்றன. இத் துறையில் ஒரு முதன்மை பட்டப்படிப்பாக BBA விளங்குகிறது. நிதி மேலாண்மை, மனிதவள மேலாண்மை, சந்தை மற்றும் விற்பனை, உற்பத்தி மேலாண்மை, கணக்கியல், மற்றும் தளவாடத்துறை போன்ற பல்வேறு கட்டங்களில் மேலாண்மையின் அடிப்படை அறிவினை மாணவர்களுக்கு வழங்குகிறது. மேலும், வணிக மேலாண்மையில் வல்லுநர்களை உருவாக்கும் வகையில் BBM பாடத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில், மேலாண்மையின் அடிப்படைக் கூறுகள், வணிக உற்பத்தி, வணிக கட்டமைப்பு, நிதி மற்றும் நிதி பரிசோதனை உள்ளிட்ட முக்கிய பாடங்களை பயிற்றுவிக்கப்படுகின்றன. வணிக மேலாண்மையில் பட்டம் பெற்றவர்கள் நிர்வாகி (Manager), நிதி ஆலோசகர் (Financial Consultant), மார்க்கெட்டிங் மேலாளர் (Marketing Manager), மனிதவள மேலாளர் (HR Manager), அணுகுமுறை மேம்பாட்டாளர் (Operations Manager), உற்பத்தி மேற்பார்வையாளர் (Production Supervisor), நிறுவன வளர்ச்சி ஆலோசகர் (Business Development Consultant) முதலான துறைகளில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தொழில்நுட்ப பரிணாமத்தில் மிகவும் விரிவான மற்றும் ஊக்கமான படிப்பினையாக விளங்குவது Computer Science (கணினி அறிவியல்) ஆகும். இரு கற்கைகளை உள்ளடக்கியுள்ளதான இப் பாடதிட்ட வகையான BSc (Hons) in Computer Scienceஇல் நிரலாக்கம், தரவுத்தளம், வலைத் தொழில்நுட்பம், மென்பொருள் பொறியியல், கணினி அமைப்புகள் மற்றும் தகவல் பாதுகாப்பு போன்ற துறைகள்

தொடர்பாகவும், BSc in Information Technologyஇல் தகவல் தொழில்நுட்பம், இணைய இணைப்பு, சந்தைப்படுத்தல், நெட்வொர்கிங், மற்றும் மின்னணு தொழில்நுட்பம் போன்ற துறைகள் தொடர்பாகவும் விரிவுபடுத்தப்பட்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாக விளங்குகிறது. கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் துறையில் இந்த பட்டப்படிப்பை முடிப்பவர்கள் பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும். உதாரணமாக,Software Engineer (மென்பொருள் பொறியாளர்), System Analyst (சிஸ்டம் பரிசோதகராய்), Database Administrator (தரவுத்தள நிர்வாகி), Network Engineer (நெட்வொர்க் பொறியாளர்), Cyber Security Analyst (சைபர் பாதுகாப்பு ஆய்வாளர்), Web Developer (வலைப்பக்க உருவாக்குனர்), Mobile App Developer (மொபைல் செயலி உருவாக்குனர்), IT Consultant (தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்) என்பவற்றை கூறலாம். தொலைநோக்கு கல்வி முறையில், மாணவர்களுக்கு திறமையான கணினி அறிவியலிலும், தொழில்நுட்பத்திலும் வல்லுநராக மாற உதவுகிறது.

சமூகத்தின் அமைப்புகளை, அதன் வளர்ச்சி மற்றும் மனிதர்களின் பண்பாட்டை ஆராய்ந்து, சமூகக் கல்வி, பொருளாதாரம், அரசியலமைப்பு, சமூகவியல், சிந்தனை மற்றும் சமூக மாற்றங்களைப் பற்றிய விரிவான புரிதலை வழங்கும் அடிப்படையில் திறந்த பல்கலைக்கழகத்தில் உள்ள ஒரு கற்கை நெறியாக Social Sciences (சமூக அறிவியல்) பாட நெறி விளங்குகிறது. இத் துறை சார்ந்து மாணவர்களுக்கு திறமைகள் மற்றும் அறிவை வழங்குவது, சமூக சேவைகள், அரசாங்கம், கல்வி, ஆராய்ச்சி, மற்றும் மனித உரிமைகள் போன்ற துறைகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்களின் பொருட்டே இக் கற்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 4 ஆண்டு கால படிப்பினை உடைய இக் கற்கையை பயில்வதன் மூலம், Social Worker (சமூகப் பணியாளர்), Policy, Analyst (கொள்கை ஆய்வாளர்), Public Relations Officer (பொது தொடர்பு அதிகாரி), Human Rights Advocate (மனித உரிமைகள் வாதி), Researcher (ஆராய்ச்சி நிபுணர்), Development Consultant (மேம்பாட்டு ஆலோசகர்), NGO Worker (சாதாரண அமைப்புகள் பணியாளர்), Community Outreach Officer (சமூக தொடர்பு அதிகாரி), Gender Studies Consultant (பாலின ஆய்வு ஆலோசகர்) போன்ற தொழில் வாய்ப்புக்களை பெற முடியும்.

இயற்கையின் தருணங்களைப் பற்றிய ஆழ்ந்த அறிவையும், அந்த அறிவை உண்மையான வாழ்க்கையில் பயன்படுத்தும் திறன்களையும் கற்றுத்தருவதாகன Natural Sciences (இயற்கை அறிவியல்) படிப்புகள் மாணவர்களுக்கு உயிரியல், ரசாயனவியல், பொருளியல், மற்றும் சுற்றுப்புற அறிவியல் போன்ற பல்வேறு துறைகளில் ஆழமான அறிவை வழங்குகின்றன. இத் துறையை தொடர்வதால் மூலம் Research Scientist, சுற்றுப்புற ஆலோசகர் (Environmental Consultant), பொருளியல் விஞ்ஞானி (Physicist), ரசாயனவியல் நிபுணர் (Chemist), சுற்றுப்புற மேலாளர் (Environmental Manager), அறிவியல் ஆசிரியர் (Science Teacher) போன்ற பதவிகளில் பணிபுரிய முடியும்.

கலை மற்றும் மனித அறிவியல் (Arts and Humanities) துறையில் பட்டப்படிப்பு மற்றும் முதுகலைப் படிப்பு பாடங்களை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பயிலக் கூடிய வசதிகள் காணப்படுகின்றன. பொதுக் கலை பட்டப்படிப்பின் மூலமாக, மாணவர்கள் சமூக அறிவியல், இலக்கியம், மொழி, வரலாறு மற்றும் பிற கலை சார்ந்த பாடங்களில் விரிவான அறிவைப் பெற முடியும். சமூக அறிவியல் (Social Science), வரலாறு (History), இலக்கியம் (Literature), மொழியியல் (Linguistics), கலைச் சிந்தனை (Philosophy) முதலான பாடநெறிகளை உள்ளடக்கியதாக BA in General Arts (பொதுக் கலை பட்டப்படிப்பு)

விளங்குகிறது. BA in Education (கல்வி கலை பட்டப்படிப்பு) கல்வி பயிற்சி, கல்வி உளவியல், கல்வி திறன் மேம்பாடு மற்றும் மாணவர் வளர்ச்சி போன்ற துறைகளில் சிறந்து விளங்கும் பொருட்டு, கல்வி உளவியல் (Educational Psychology), கல்வி முறைமை (Educational System), கல்வி வரலாறு (History of Education), கல்வி கலைவியல் (Philosophy of Education) போன்ற பாடங்களை உள்ளடக்கியுள்ளது. முதுகலைப் படிப்புகள் (Postgraduate Programs) என்ற அடிப்படையில் நோக்கும் போது, MA in Sociology (சமூகவியல் முதுகலைப் படிப்பு)இல் சமூகத் தொற்றுகள் (Social Issues), சமூக மாற்றம் (Social Change), சமூக கொள்கைகள் (Social Policies),சமூக ஆராய்ச்சி முறை (Social Research Methods) முதலான பாடநெறிகளை உள்ளடக்கி, சமுதாயம், பண்பாட்டியல், சமூக மரபுகள், சமூக நிலைகள் மற்றும் தற்கால சமூகப் பிரச்சினைகள் ஆகியவற்றை விரிவாக செயற்படுதலை நோக்காகக் கொண்டு பயிற்றுவிக்கப்படுகிறது. MA in Social Work (சமூக பணியில் முதுகலைப் படிப்பில் சமூக வேலை மற்றும் சேவை (Social Work and Services), சமூக மாற்றம் மற்றும் அபிவிருத்தி (Social Change and Development), மனநிலை மற்றும் புனர்வாழ்வு (Mental Health and Rehabilitation) முதலான தலைப்புக்களில் படிப்பினை வழங்கப்படுகிறது. இந்த படிப்புகள் மாணவர்களுக்கு கல்வி துறையில் முக்கியமான திறன்களையும் அறிவையும் வழங்குவதுடன், அவர்கள் எதிர்காலத்தில் ஒரு நல்ல ஆசிரியராக அல்லது கல்வி அதிகாரியாகச் செயல்படவும், தேவையான திறன்களை பெறவும் உதவுகின்றன.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் (OUSL) வணிகம் துறையில் பட்டப்படிப்பு மற்றும் முதுகலைப் படிப்புகள் வழங்கப்படுகின்றன. வணிகம் துறையில் படிப்புகள், மாணவர்களுக்கு வணிகத் துறைகளில் அறிவையும் திறனையும் வழங்குவதுடன், அவர்கள் தொழில் திறன்களை மேம்படுத்தவும், சமூகத்தில் வணிக பிரச்சினைகளை தீர்க்கவும் உதவுகின்றன.

வணிகத் துறையில் உள்ள அடிப்படை அறிவையும் திறனையும் மாணவர்களுக்கு வழங்கும் BCom - Bachelor of Commerce (வணிக பட்டப்படிப்பு) இல் கணக்கியல், பொருளாதாரம், வணிக நிர்வாகம் (Business Management), நிதி, வணிக சட்டம் (Business Law), சந்தை மற்றும் வர்த்தகம், உலகளாவிய வணிகம் போன்ற பாடப் பிரிவுகள் காணப்படுகின்றன. மேலும், வணிகத் துறையில் முன்னேற்றம் செய்யும், உயர்ந்த அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட முதுகலைப் படிப்பாக MCom - Master of Commerce விளங்குகிறது. நிதி மேலாண்மை, வணிக புள்ளியியல், வணிக ஆராய்ச்சி (Business Research), சமூக மற்றும் பொருளாதார வணிகம் (Social and Economic Business), பரிமாற்றம் மற்றும் வர்த்தகம் (International Trade), வணிக உளவியல் (Business Psychology) போன்ற பாடப் பிரிவுகளை உள்ளடக்கியதாக இக் கற்கை விளங்குகிறது. BCom மற்றும் MCom படிப்புகள் மாணவர்களுக்கு சிறந்த தொழில்துறை திறன்களையும், வணிகத் துறையில் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள உதவும். மேலும், வணிக கணக்கியல், நிதி மேலாண்மை, மார்க்கெட்டிங், வர்த்தகம், சந்தை ஆய்வு மற்றும் வர்த்தக சட்டம் போன்ற துறைகளில் முன்னணி பணிகளை மேற்கொள்ள வழிவகுக்கும்.



சுற்றுச்சூழல் பிரச்சினைகளை தீர்க்கும் திறன்களை உருவாக்கும் MSc in Environmental Science (சுற்றுச்சூழல் அறிவியலில் முதுகலைப் படிப்பு) பட்டப்படிப்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வளங்களின் நியாயமான பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழலின் மாறுபாடுகளை புரிந்துகொள்ளும் அறிவு பெறப்படுகிறது. அதன் வழியே சுற்றுச்சூழல் அறிவியலின் அடிப்படைகள் (Introduction to Environmental Science), புவி அறிவியல் (Earth Science), சுற்றுச்சூழல் மேலாண்மை (Environmental Management), மாசுபாடு மற்றும் அதன் தீர்வுகள் (Pollution and Solutions), சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் (Environmental Laws and Policies), பருவவியல் மாற்றம் (Climate Change), சுற்றுச்சூழல் தொழில்நுட்பங்கள் (Environmental Technologies), சுற்றுச்சூழல் ஆராய்ச்சி (Environmental Research)முதலான பாட நெறிகள் உள்வாங்கப்பட்டுள்ளன. MSc in Environmental Scienceஇல் உள்ளடங்கும் பாடநெறிகளாக, சுற்றுச்சூழல் ஆராய்ச்சி முறைகள் (Environmental Research Methods), சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் (Environmental Law and Policies), சுற்றுச்சூழல் நிதி (Environmental Economics), பருவவியல் மாற்றம் மற்றும் அதன் தீர்வுகள் (Climate Change and Solutions), சுற்றுச்சூழல் தொழில்நுட்பங்கள் (Environmental Technologies) என்பனவும், சான்றிதழ் மற்றும் டிப்ளோமா படிப்புகள் (Diploma & Certificate Programs) என்ற அடிப்படையில் Diploma in Environmental Management (சுற்றுச்சூழல் மேலாண்மையில் டிப்ளோமா), Certificate in Environmental Management (சுற்றுச்சூழல் மேலாண்மையில் சான்றிதழ்) என்பனவும் இப் பல்கலைக்கழகத்தால் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கற்கைகளாகும். மாணவர்கள் இந்த படிப்புகளை முடித்த பிறகு சுற்றுச்சூழல் மேலாண்மை, மாசுபாடு கட்டுப்பாடு, வளப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் சுற்றுச்சூழல் நிதி போன்ற துறைகளில் தொழில்நுட்ப நிபுணர்களாகவும், ஆலோசகர்களாகவும் செயல்பட முடியும். சுற்றுச்சூழல் தொடர்புடைய அரசுத்துறை, தனியார் துறை, சர்வதேச அமைப்புகள், மற்றும் சமூக சேவை நிறுவனங்களில் முக்கியமான பங்குகளை வகிக்க முடியும்.குறிப்பாக சுற்றுச்சூழல் ஆலோசகர், நிலஅரசு அதிகாரி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேற்பார்வையாளர், சமூக வள மேலாண்மையாளர், பருவவியல் மாற்ற ஆலோசகர், சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிபுணராக திகழ முடியும்.

50 நாட்களுக்கு ஒரு முறை மாதவிடாய் ஆகும் பெண்களுக்கு 300 நாட்களில் குழந்தை பிறக்கிறது. 28 நாட்களுக்கு ஒரு முறை மாதவிடாய் ஆகும் பெண்களுக்கு 280 நாட்களில் குழந்தை பிறக்கிறது.





# குறுக்கெழுத்து புதிர்









### இடமிருந்து வலம்

1. மதியின் வேறு பெயர்
3. மிகப் புனிதமானதாம் 'இந்த' மந்திரம்.
4. பார்வதி தேவியின் வேறொரு பெயர் *-----' மகேஸ்வரி
5. மருந்துப்பொருள் ஒன்று ----'க்காய்
6. கர்ப்பகிரகத்தில் இருக்கும் தெய்வ உருவம் கலைந்துள்ளது.
14. படம் எடுத்து ஆடுமாம் ----'ப் பாம்பு.
16. நலம் விசாரிப்பது.
18.முருகன், வேல் எனும் ஆயுதத்தை தன் கையில் தாங்கியுள்ளதால் இந்த பெயரோ!

### கீழிருந்து மேல்

4. மருந்து சாப்பிடுவதால் மட்டும் காய்ச்சல் குணமாகும் என்று ' ___'தரவாதம் இல்லை.
9. ______அம்மன்
10.ஒரு குறிப்பிட்ட விசயத்தைப் பற்றி "ஆலோசிக்கும்" மக்களின் சந்திப்பு
17.சமுதாயம் - வேறொரு சொல்
18 அரசர்கள் மாறு____ நகர்வலம் வருவர்.
20.___அலையால் குழந்தைகளுக்கு பாதிப்பு வருமா என்பது கேள்விகுறி,

### வலமிருந்து இடம்

7. அமர்நாத் பகுதியுடன் சேர்த்து சொல்லப்படும் மற்றொருசிவஸ்தலம்
9. கண்ணதாசன் ஒரு?
12. கீழ்த்தரமான எண்ணம்உடைய தன்மை
13. '----'ரக்காரனுக்கு புத்தி மட்டு.
15. அமாவாசைக்கு மூன்றாம் நாள் பார்க்கும் பிறை 'பிறை,
20.சிங்கம் ஒத்தசொல்

### மேலிருந்து கீழ்

1. ஆசிரியர்களின் ஊதியம் தொடர்பாக போராடுவது ஆசிரியர் ___ம்
2. சில நேரங்களில் கோவிலில் சுவாமி சன்னதி முன் 'இது' போடுவர்.
3. போலீஸ் - தமிழில்
6.வயது முதிர்ந்த பெண்
8.நெற்றி___வை நிலத்தில் விழ பாடுபட்டான்.
11.யாகத்தீ வளர்க்க அக்னி____தேவை.
13.யுத்தக்கருவி - வேறு சொல் கலைந்துள்ளது
14.திசை__ வெற்றி கொடி நாட்டினான்.

# 10 குழந்தைகளில் வளர்ச்சி மற்றும் மனநல பிரச்சினைகள்





குழந்தைப் பருவம் என்பது மனித வாழ்கையின் மிகவும் முக்கியமான காலமாகும். இந்தப் பருவத்தில், ஒரு குழந்தையின் உடல், மனம் மற்றும் சமூக முன்னேற்றம் அனைத்தும் ஒரே நேரத்தில் செழிக்கின்றன. ஆனால் சில குழந்தைகளில், பேச்சு, உடல் இயக்கங்கள், அறிவுத்திறன், அல்லது சமூக உறவுகளுடன் தொடர்புடைய சில வளர்ச்சி மற்றும் மனநல பிரச்சினைகள் ஏற்படலாம். இந்த பிரச்சினைகள் சரியான நேரத்தில் கண்டறிந்து, அவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால், அந்த குழந்தைகள் நலம் பெற முடியும். குழந்தைகளில் காணப்படும் சில முக்கியமான வளர்ச்சி மற்றும் மனநல பிரச்சினைகளையம், அவற்றுக்கான தீர்வுகளையும் விரிவாக நோக்குவோம்.

### குழந்தைகளில் வளர்ச்சி மற்றும் மனநல பிரச்சினைகள்

குழந்தைப் பருவம் என்பது மனித வாழ்கையின் மிகவும் முக்கியமான காலமாகும். இந்தப் பருவத்தில், ஒரு குழந்தையின் உடல், மனம் மற்றும் சமூக முன்னேற்றம் அனைத்தும் ஒரே நேரத்தில் செழிக்கின்றன. ஆனால் சில குழந்தைகளில், பேச்சு, உடல் இயக்கங்கள், அறிவுத்திறன், அல்லது சமூக உறவுகளுடன் தொடர்புடைய சில வளர்ச்சி மற்றும் மனநல பிரச்சினைகள் ஏற்படலாம். இந்த பிரச்சினைகள் சரியான நேரத்தில் கண்டறிந்து, அவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால், அந்த குழந்தைகள் நலம் பெற முடியும். இப்போது, குழந்தைகளில் காணப்படும் சில முக்கியமான வளர்ச்சி மற்றும் மனநல பிரச்சினைகளைக் கண்டு, அவற்றுக்கான தீர்வுகளைப் பார்ப்போம்.

### 1. வளர்ச்சி தாமதம்



குழந்தை ஒவ்வொரு பருவத்திலும், குறிப்பிட்ட உடல் மற்றும் மன வளர்ச்சியிலான நிலைகளை அடைவதை எதிர்பார்க்கின்றோம். ஆனால் சில குழந்தைகளில், பேச்சு, இயக்கத் திறன், அறிவுத்திறன் அல்லது சமூக உறவுகளுக்கு தேவையான வளர்ச்சி தாமதமாக இருக்கலாம். குழந்தை பிறருடன் தொடர்பு கொள்ள ஆர்வம் காட்டாத தன்மையை இதற்கு உதாரணமாக கூற முடியும். இது தற்காலிகமான அல்லது நீடித்த பிரச்சினையாக மாறக்கூடும். ஆரம்ப சிகிச்சையாக, பேச்சுத் திறன் பயிற்சிகள், உடற்பயிற்சி மற்றும் சமூக உறவுகளின் மேம்பாட்டுக்கான கவனம் வழங்குவதன் மூலம், குழந்தையின் வளர்ச்சியில் முன்னேற்றத்தை அடைய உதவலாம்.

### 2. ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் டிசார்ட்ர் (ASD)



ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் டிசார்ட்ர் (ASD) என்பது குழந்தைகள் பருவத்தில் தொடங்கும் மூளையின் வளர்ச்சி குறைபாடு ஆகும். இது தொடர்பு, சமூக உறவுகள் மற்றும் சில சீரற்ற நடத்தை குறைகளை உருவாக்கும். குழந்தைகள் பெயரை அழைக்கும் போது பதில் அளிக்காதது, கண் தொடர்பு தவிர்த்தல், அல்லது தேவைகளை சொல்வதில் சிக்கல். ASD கொண்ட குழந்தைகளுக்கு பேச்சுத் திறன் பயிற்சி, குடும்ப ஆதரவு மற்றும் மற்ற உகந்த சிகிச்சைகள் மிகவும் அவசியமாக இருக்கின்றன.

### 3. அவதான குறைவு மற்றும் மிக இயக்கக் குறைபாடு (ADHD)

ADHD என்பது குழந்தைகள் பருவத்தில் அதிக கவனக்குறைவு, அதிக ஆற்றல் மற்றும் திடீர் செயல்பாடுகளைக் கொண்ட ஒரு நிலையாகும். இது அவர்களின் கல்வி மற்றும் சமூக பழக்கங்களைக் கடுமையாக பாதிக்கலாம்.

அதிக சத்தம், இடையூறுகள், தொடர்ந்து இயக்கம் மற்றும் விளையாட்டில் கவனம் செலுத்தாத நிலைகள் என்பவற்றை இவ் இயக்க குறைபாட்டுக்கான அறிகுறியாக கருத முடியும். இக் குறைபாடு உள்ள ஒரு குழந்தைக்கு சரியான நடைமுறைகள், நடத்தையைக் கட்டுப்படுத்தும் பயிற்சிகள் மற்றும் மருந்து சிகிச்சைகள் உதவலாம்.




4. உணர்ச்சி செயல்முறை சிக்கல்



குழந்தைகளுக்கு ஒளி, சத்தம் அல்லது வேறு உணர்ச்சி தகவல்களை பரிசோதிப்பதில் சிக்கல்கள் ஏற்படலாம். சில குழந்தைகள் அதிகமாக சத்தங்களுக்கு பதில் அளிப்பார்கள், மற்றவர்கள் அந்த சத்தங்களுக்கு பதில் அளிக்க மாட்டார்கள். இவ்வாறான தன்மையில் உள்ள குழந்தைகளே உணர்ச்சி செயல்முறை சிக்கலிற்கு உட்பட்டுள்ளவர்களாகும். உணர்ச்சி ஒருங்கிணைப்பு பயிற்சிகள் மற்றும் உணர்ச்சி ஊக்குவிப்பு மூலமாக இந்த சிக்கலை கையாள முடியும்.

5. அறிவுத்திறன் குறைபாடு

அறிவுத்திறன் குறைபாடுகள் குழந்தைகளின் கற்றல் திறனில் தாமதம் அல்லது குறைபாட்டை ஏற்படுத்துகின்றன. இது மரபணுக்களில் இருந்து அல்லது பிறப்பின் போது ஏற்பட்ட சூழ்நிலைகளால் ஏற்படலாம். செயல்கள் மற்றும் அறிவுத்திறன்கள் பொதுவாக அதீத மெதுவாக வளரும் தன்மையை இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம். சிறப்பு கல்வித் திட்டங்கள், நடத்தை சிகிச்சைகள் மற்றும் குடும்ப ஆதரவு மூலம், குழந்தைகளின் அடிப்படை திறன்களை மேம்படுத்துவதன் மூலம் இக் குறைபாட்டு தன்மையை போக்க முடியும்.



6. மொழி தாமதம் மற்றும் தொடர்பு சிக்கல்கள்

குழந்தைகளின் மொழி பயிற்சி மற்றும் தொடர்பு திறன்கள் பாதிக்கப்படலாம். சில குழந்தைகள் பேசுவதில் தாமதம் ஏற்படும் அல்லது மாற்று வழிகளில் தொடர்பு கொள்ள முயற்சிப்பார்கள். எடுத்துக்காட்டாக குழந்தைகள் முந்தைய மாதிரியான ஒலிகளைப் பயன்படுத்தாமல், எதிர்பார்க்கும் நேரத்தில் பதிலளிக்காமல் இருப்பதை கூறலாம். இதற்கான சிகிச்சை முறையாக, பேச்சுத் திறன் பயிற்சிகள் இந்த பிரச்சினையை சரிசெய்ய உதவுவதால் அவர்களுடன் நேரத்தை ஒதுக்கி பேச்சு திறனை மேம்படுத்த முடியும்.

குழந்தைகளில் வளர்ச்சி மற்றும் மனநல பிரச்சினைகள் ஆரம்பத்திலேயே கண்டறியப்பட வேண்டும். பிரச்சினைகளை ஆரம்ப கட்டத்தில் கண்டறிந்து, உரிய சிகிச்சைகள் மற்றும் முறைகளை உடனடியாக பயன்படுத்துவதன் மூலம், குழந்தைகளின் முழு திறனை அடைவதற்கு உதவ முடியும். பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள், குழந்தையின் வளர்ச்சி மற்றும் மனநல பிரச்சினைகளுக்கு சந்தேகித்தால், சிறந்த சிகிச்சைக்கான வழிகாட்டுதலுக்கு மருத்துவர் அல்லது வளர்ச்சி நிபுணரை அணுக வேண்டும். பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்கள் குழந்தைகளின் முன்னேற்றத்தை கவனித்து, அவர்கள் தேவையான ஆதரவையும் வழிகாட்டுதலையும் வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். அதுமட்டுமின்றி, ஒரு ஆதரவான மற்றும் ஊக்குவிப்பான சூழல், குழந்தைகளுக்கு தன்னம்பிக்கையுடன் சமூகத்தில் வாழவும், அவர்களின் திறன்களை முழுமையாக அடைவதற்கும் உதவும் என்பதை கருத்திற்கொண்டு, எதிர்காலத்தில் அவர்களை சிறந்த நல்லறிவு உள்ளவர்களாக மிளிரச் செய்வது எமது பொறுப்பாகும்.

# 11 PERMUDO TRIANGLE






உலகின் மிக மர்மமான இடங்களில் ஒன்றாக பெர்முடா முக்கோணம் பார்க்கப்படுகிறது. வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலின் மேற்கு பகுதியில் உள்ள ஒரு பகுதியான இதன் அமைவிடத்தை இன்னும் விரிவாகப் பார்த்தால் தென்மேற்கு வட அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள புளோரிடா, பெர்முடா மற்றும் புவேர்ட்டோ ஆகிய மூன்று முக்கிய இடங்கள் இணைக்கும் முக்கோண வடிவ பகுதியாக அமைந்துள்ளது. இதன் மொத்த பரப்பளவாக 1.3 முதல் 3.9 மில்லியன் கிலோ மீட்டர் வரை மாறுபடும். இப்பகுதியின் ஆழமானது பகுதிக்கு பகுதி மாறுபடுகிறது. ஆனால் சராசரியாக இதன் ஆழமானது சுமார் 3820 மீட்டர் (10,725 அடி) ஆழம் கொண்டது எனக் கூறப்பட்டாலும் இன்று வரை இப்பகுதியின் பரப்பளவு, ஆழம் என்பன விஞ்ஞானிகளால் அண்ணளவாக கணிக்கப்பட்டதே தவிர இவ் அளவீடுகள் துல்லியமானவை அல்ல.

உலகின் மிகவும் அதிகமாக, பிரபல்யமான கப்பல் போக்குவரத்துப் பகுதியாக அமையும் இதன் வழியே அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் கரீபியன் தீவுகளில் உள்ள துறைமுகங்களுக்கு தினந்தோறும் கப்பல்கள் கடந்து செல்கின்றன. 1505 ஆம் ஆண்டு இத்தீவுக் கூட்டங்களை கண்டுபிடித்த ஸ்பெயின் நாட்டு ஆய்வாளர் Juan De Bermudez என்பவரின் நினைவாக பெர்முடா என பெயரிடப்பட்டது. 1612 ஆம் ஆண்டு, ஆங்கிலேயர்கள் பெர்முடாவில் குடியேற்றம் தொடங்கினர். இது, பெர்முடா தீவுகளில் மனிதகுலத்தின் நிரந்தர வாழ்வு ஆரம்பிக்கும் நாளாக கருதப்படுகிறது.

பெர்முடாவின் அதிகாரபூர்வ மொழியாக ஆங்கிலம் (English) கருத்தப்பட்டாலும், அங்கு போர்த்துக்கேய குடியேற்றிகள் (Portuguese immigrants) அதிகமாக வாழ்கின்றமையினாலும், அவர்களின் சமூகத்தில் பங்கு வகித்துள்ள மொழியாக மாறியுள்ள காரணத்தினாலும் போர்த்துக்கீசிய மொழி பரவலாகப் பேசப்படுகிறது.
கரிபியன் கடல் மற்றும் அட்லாண்டிக் சமுத்திரத்தின் இடையே அமைந்துள்ள ஒரு முக்கிய இடமாக உள்ள பெர்முடா, ஏழு முக்கிய தீவுகள் மற்றும் 170 சிறிய தீவுகள் மற்றும் பாறைகள் கொண்ட தீவுக் கூட்டமாகும். இது மொத்தத்தில் சுமார் 500,000 சதுர மைல்கள் பரப்பளவு கொண்டதாக கருதப்படுகிறது. 65,000 மக்கள் வசிக்கின்ற இத் தீவில் ஒவ்வொரு ஆண்டும் அரை மில்லியன் சுற்றுலாப் பயணிகள் பெர்முடாவிற்கு வருகை தருகின்றனர். பெர்முடாவின் கடற்கரையில் காணப்படும் இளம் சிவப்பு நிறமே சுற்றுலாப் பயணிகளை கவர காரணமாகின்றது. அதில் உள்ள பவளங்கள் மற்றும் பாறைகள் ஆகியவற்றின் பிரதிபலிப்பு மற்றும் அவற்றின் கசிவுவின் விளைவாகவே அவை இளம் சிவப்பு நிறமாக காட்சியளிக்கின்றன. மர்மப்பகுதியாக விளங்கும் இப் பகுதி பல்வேறு விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களால் ஆராயப்பட்டது. எனினும், சில பொதுவான விளக்கங்களும், கற்பனைகளும் அப்பகுதி வாழ் மக்களால் பரப்பப்பட்டுள்ளன. பெரும்பாலும் கடலில் காணப்படும் சக்தி வாய்ந்த காற்றுகள் மற்றும் கடல் பருவ நிலைகள் இந்த பகுதிக்குள்

புதிய மற்றும் வினோதமான மாற்றங்களை உருவாக்குகின்றன. இது நெருக்கடியை உருவாக்கி, வானிலை அல்லது கடல் நிலைகள் காரணமாக விமானங்கள் மற்றும் கப்பல்கள் வழி மாற செய்யலாம் என நம்பப்படுகிறது.

1. Flight 19 என்பது ஐக்கிய அமெரிக்க கடற்படை சார்ந்த 5 பயிற்சி விமானங்களின் குழுவாக கருதப்படுவதாகும். 1945 ஆம் ஆண்டு, இவை பெர்முடா டிரயங்கலுக்கு அருகிலுள்ள கடலில் பயிற்சி முறையாக பறக்கச் சென்ற போது இந்த விமானங்கள் திடீரென தொடர்பை இழந்து காணாமல் போனதாக குறிப்பிடப்படுகிறது. இவ் விமானத்தை மீட்கும் பணிக்காக வந்த PBM Mariner என்ற விமானமும் அதே பகுதியில் காணாமல் போனது.
2. அமெரிக்க கடற்படையின் மிகப்பெரிய கப்பலான USS Cyclops, 1918 இல் 300 பேர் மற்றும் 10,000 டன் எரிவாயு கொண்டு இப் பாதை வழியே பயணம் செய்த போது காணாமல் போனது.
3. பெரிய எரிவாயு கப்பலான Marine Sulphur Queen 1963 இல் இப் பாதை வழி செல்லும் போது மர்மமாக காணாமல் போனது.
4. 1977 ஆம் ஆண்டு, பெர்முடா டிரயங்கலின் பகுதியில் பயணம் செய்யும் போது SS Marine Star கப்பலானது காணாமல் போனது.

பெர்முடா டிரயங்கலின் பகுதியில் அதிகமாக சூறாவளி மற்றும் பெரிய புயல்கள் காரணத்தால் ஏற்படும் பருவ நிலைகள் கப்பல்களையும் விமானங்களையும் வழிமறிய செய்யும். அது மட்டுமின்றி, கடலோர பருவ நிலைகள், காந்த விசை மற்றும் பவளச் சூறைகள் போன்ற பல காரணங்களின் சந்திப்பும் மர்மங்கள் இடம்பெற காரணமாகும். இதனால், பெர்முடா முக்கோணத்தில் ஏற்படும் மர்மங்கள் தொடர்பாக இன்னும் பெரும்பாலும் புரிந்துகொள்ளப்படாத விடயங்கள் உள்ளன.

Edward van Winkle Jones என்பவரால் எழுதப்பட்ட Miami Herald என்ற தலைப்பில் உடைய கட்டுரையில் பெர்முடா பகுதியில் வழக்கத்திற்கு மாறாக காணாமல் போனவை பற்றிய ஆரம்பகட்ட தகவல்கள் உள்ளடங்களாக Associated press மூலம் விநியோகிக்கப்பட்டது. இக்கட்டுரை 1950 செப்டம்பர் 17 அன்று அமெரிக்க செய்தித்தாள்களில் வெளிவந்தது. இதன்பின் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு Fade பத்திரிகை மூலம் George X Sandin என்பவர் "See Mystery at our Black Door" எனும் தலைப்பில் சிறு கட்டுரையை வெளியிட்டார். அக்கட்டுரையில் Sandin என குறிப்பிடப்பட்டுள்ளதே நாம் இப்போது அறிந்த பெர்முடா முக்கோண பகுதி. அவர் தன்னுடைய கட்டுரையில் முக்கோண பகுதியில் நடந்த அனேகமான விபத்துக்கள் பற்றியும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். 1964 பெப்ரவரியில் Vincent Codiz Argosy என்பவரால் The Deadly Bermuda Triangle என்ற தலைப்பில் கட்டுரை எழுதப்பட்டது. அடுத்த ஆண்டு Cadiz இந்தக் கட்டுரையை Invisible Horizon என்ற புத்தகமாக விரிவுபடுத்தினார். Fatal Sand's இன் கட்டுரை தோராயமாக ப்ளோரிடோ, பெர்முடா மற்றும் புவேர்ட்டோ ரிக்கோவால் சூழப்பட்ட நீர் நிறைந்த முக்கோணம் என்று இந்த பெர்முடா முக்கோண பகுதியினை விவரித்துள்ளார். Bermuda Triangle இன்னும் தலைப்பிலே 1974 ஆம் ஆண்டு சார்லஸ் பெர்லிட்ஸ் என்பவர் ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டார். இப்புத்தகம் முப்பது மொழிகளில் கிட்டத்தட்ட 20 மில்லியன் பிரதிகள் விற்றது. இப்புத்தகம் மிகவும் பிரபல்யமானதாக இன்றுவரையிலும் காணப்படுகிறது.

நிஷாந்தன் சதுர்சனா
மட்டிக்களி



# திருக்கோணமலையின் ஐப்பசி மாத செய்திகள்

1. கிழக்கு ஆளுநர் - பிரித்தானிய உயர்ஸ்தானிகள் இருவருக்குமிடையிலான சந்திப்பு திருக்கோணமலை ஆளுநர் அலுவலகத்தில் 17.10.2024 அன்று இடம்பெற்றது.
2. திருக்கோணமலைக்கே உரித்தான கும்ப விழா! நவராத்திரியின் இறுதி நாளான விஜய தசமி அன்று இடம்பெற்றது.
3. திருக்கோணமலையில் 4 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான 217 பேர் போட்டி.
4. கந்தளாய் சீனித்தொழிற்சாலைக்கு சொந்தமான 11000 ஏக்கர் காணியை குறுகியகால பயிர் செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவு!
5. 30 வருடங்களின் பின்னர் திரியாய் பிரதேச மக்கள் தமது சொந்த உறுதிக்காணியில் விவசாயம் செய்ய அனுமதி !
6. கிழக்கு பல்கலை திருமலை வளாகத்தில் 6வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு "21 ம் நூற்றாண்டுக்கான ஒருங்கிணைந்த பார்வை" எனும் தொனிப்பொருளில் திருமலை வளாக முதல்வர் ஜி. தேவதாசன் தலைமையில் இடம்பெற்றது.



1



2



3



4



5



6

# தளத்தின் தடம்

பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கான முதற்கட்ட வழிகாட்டல் அமர்வு 05.10.2024 - சனிக்கிழமை 9.00 am - 12.00 pm வரை நேரடி மற்றும் நிகழ்நிலை அமர்வாக தளம் அலுவலகத்தில் இடம்பெற்றது.






15.10.2024 செவ்வாய்க்கிழமை தளம் அமைப்போடு இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் Coordinators உடனான கலந்துரையாடல் வரை தளம் அலுவலகத்தில் இடம்பெற்றது.

16.10.204 புதன் கிழமை 8.00 pm - 9.30 pm வரை University College தொடர்பான விளக்க கருத்தமர்வு நிகழ்நிலை வழியாக மேற்கொள்ளப்பட்டது.



17.10.2024 வியாழக்கிழமை 9.00 am - 1.00 pm வரை தளம் அமைப்பின் ஏற்பாட்டின் கீழ் இரத்த தான முகாம் நடத்தப்பட்டது.






இளையோரின் திறன் விருத்தி சார்ந்து Microsoft Excel Certificate Course ஒரு மாத காலம் நடத்தப்பட்டது. இதன் முதல் வகுப்பு 18.10.2024 - வெள்ளிக்கிழமை 2.30 pm - 5.30 pm வரை இடம்பெற்றது.






# தளத்தின் மார்கழி மாத திட்டங்கள்

- பாடசாலை விடுமுறையிலிருக்கும் O/L, A/L மாணவர்கள் மற்றும் School Leavers க்கான தளிர் 3.0 திறன் விருத்தி வகுப்புகள் நடாத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- "NDT" கற்கைகளுக்கான வழிகாட்டல் அமர்வு இணையவழி மூலம் நடாத்தப்பட ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.
- "Canva Designing Tool" வகுப்புகள் கிழமைக்கு இரண்டு வகுப்புகள் வீதம் மாதம் முழுவதும் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. .
- விருட்சம் மாத இதழ் வெளியீடு மற்றும் விருட்சம் மாத இதழ் வாசகர் வட்ட கலந்துரையாடல் நிகழ்வு நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான தளத்தின் வருடாந்த இறுதிக் கூட்டம் நடைபெறவுள்ளது.
- Cyber Security வழிகாட்டல் அமர்வு நிகழ்த்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- Google Tools பயிற்சி, Excel பயிற்ச்சிகளில் கலந்து கொண்டு பயிற்சிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# விருட்சம்



## தலைமை ஆசிரியர்

மேரி ரஜனட் நோபட் சேவியர்

## இதழாசிரியர் குழாம் விபரம்



நவநீதன் பிரதீஷன்

தனிஸ்டன்
வடிவமைப்பாளர்





சத்தியநாதன் ஹரிபிரவின்

நவநீதன் பிரநீதன்



**எமது மண்ணுக்காய் தளத்தின் குரல்**
**எப்பொழுதும் ஒலித்துக்கொண்டே இருக்கும்!**